# The Bible Standard



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.

அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62 : 10**

**Translated from BS 865**

**பொருளடக்கம்**


அதின் வழியாய்ப் போகாதே ........................ 2

நெப்போலியன் ........................................ 5

இஸ்ரவேலும் யாக்கோபின் இக்கட்டும் ....... 9

சாலமோன் கட்டிய ஆலயம் ...................... 13

வேதாகம வினா பெட்டி ............................ 15

யாக்கோபின் ஏணி சொப்பனம் .................... 16


**BS Tamil Version - 12**



# அதின் வழியாய்ப் போகாதே

## Pass Not Near It

**நீதிமொழிகள் 4 : 10–19**

இராஜாவாகிய சாலமோன் தனது சொந்த போதனைகளை நன்றாய் கடைபிடித்தாரோ இல்லையோ, இந்த போதனைகள் யாவும் மிகுந்த ஞானமுள்ளவை என்று பொதுவாக ஒப்பு கொள்ளப்பட்டவைகளாக இருக்கிறது. இது முற்காலத்திலேயே சொல்லப்பட்டவைகளாய் இருந்தாலும் இன்றைய காலத்திற்கும் பொருந்தக் கூடியவைகளாக இருக்கின்றன. ஞானத்திற்காக சாலமோன் ஏறெடுத்த ஜெபத்தை தேவன் கேட்டு, அந்த விண்ணபத்திற்கு பதிலளித்தார் என்று நமக்கு சொல்லப் பட்டிருக்கிறது. அதனோடுகூட, அவருடைய எழுத்துக்கள் நம்முடைய கர்த்தரின் நாட்களில் பரிசுத்த வேத வாக்கியங்களில் ஒரு பகுதியாக ஒப்புக் கொள்ளப்பட்டது. புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இதனை மறுக்கவில்லை, மாறாக அவற்றி லிருந்து மேற்கோள் காட்டியிருக்கின்றனர். அதுவே இந்த நீதிமொழிகளின் ஞானமானது பரத்திலிருந்து வந்தது என நமக்கு போதுமான உத்திரவாதத்தைக் கொடுக்கிறது.

சிந்தனைக்காக எடுக்கப்பட்ட இந்த பாடத்தில், ஞானி, ஒரு தகப்பனாக ஒரு குமாரனுக்கு நல்ல அறிவுரையைக் கொடுக்கும் சாலமோனைக் குறிக்கிறான். தகப்பன்மார்கள் தங்களுடைய பிள்ளைகளோடு மிகுந்த தொடர்பு வைத்து தங்களுடைய ஜீவியத்தின் அனுபவங்களிலுள்ள நன்மையான வைகளை கொடுப்பார்களேயானால் உலகத்திலுள்ள அனைத்து வாலிபர்களுக்கும் அது நன்மையானதாக இருக்கும். பொதுவாக அவர்களை உலகத்திற்குள் அறிமுகப்படுத்துகிற தகப்பன்மார் களுக்கு அவர்களுடைய பொதுவான காரியங்களில் அதாவது உணவு, உடை போன்ற காரியங்களில் ஓர் கரிசனை உண்டு. தங்களுடைய குழந்தைகளுடைய இருதயம் மற்றும் மனதை, ஞானம், நியாயம், நீதி மற்றும் சத்தியம் ஆகிய பாதைகளில் விருத்தி செய்வது சம்பந்தமான அதிக பொறுப்புகள் தகப்பன்மார்களுக்கு இல்லையா?

நம்முடைய நாட்களில் பெருகிவரும் தீமைகளுள் ஒன்று, பெற்றோர்களுடைய மனச்சார்பு ஆகும். குறிப்பாக, தகப்பன்மார்கள் தாங்கள் தகப்பனாக ஆனது முதல் தங்களுடைய தகப்பனுக்குரிய இந்த பொறுப்பிலிருந்து பின்வாங்குகிறவர்களாக இருக்கிறார்கள். இவை கிறிஸ்தவ ஜனங்களிடம்கூட காணப்படுகிறது. அவர்கள் போதனை களையும், கண்டிப்புகளையும், வழிநடத்துதலையும், தங்களு டைய குழந்தைகளைக் குறித்த ஆலோசனைகளையும் கொடுக்க வேண்டிய தங்களுடைய பொறுப்புகளை முற்றிலுமாக அல்லது பெருமளவில் மற்ற யாரிடமாவது விட்டு விடுகிறவர் களாயிருக்கிறார்கள். அந்த பொறுப்புகளை குறிப்பாக சபை ஊழியரிடத்திலும், ஓய்வு நாள் பள்ளி ஆசிரியர் களிடத்திலும், தாயார்களிடத்திலும் விட்டுவிடுகிறார்கள். இயற்கையான சுபாவமாகிய பெற்றோருக்குரிய சரியானபடியான கடமையில் குறைவுபடுகிற தகப்பனுடைய பிள்ளைகள், பிறருடைய ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் பெற வேண்டும். குறிப்பாக தாயாரிடமிருந்து பெறலாம். ஆனால் தகப்ப னானவன், தெய்வீக பராமரிப்பினால் அவனிடம் ஒப்படைக்கப் பட்ட அவனுடைய பிள்ளைகளின் பெரிதான விருப்பங்களை குறித்து கவனமாக விழிப்பாக இருப்பானானால், மற்றவர் களுடைய ஆலோசனைகள் தகப்பனுடைய ஆலோசனையின் இடத்தைப் பெற இயலாது.

தெய்வீகமாய் அருளப்பட்ட பொறுப்புகளை அலட்சியம் செய்யும் இது போன்றப் பெற்றோரின் கவனக்குறைவினால் பாதிக்கப்படுவது குழந்தைகள் மாத்திரமல்ல. இந்த காரியம் பெற்றோர்மேல் கூடத் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எப்படி யெனில் உயர்வாக மதிக்கப்பட வேண்டியப் பெற்றோர் மதிப்பிற்கு ஏற்றவாறு இல்லாததால் கவனிக்கப்படாமல் புறக்கணிக்கப்படும் குழந்தையானது தன்னுடைய உயர்ந்த விருப்பங்கள் புறக்கணிக்கப்படுவதை உணருகிறது. அதன் பெற்றோரையும் அதற்கேற்ப தாழ்வாக மதிப்பிடுகிறது. இதன் விளைவாக அந்த குடும்பத்தில் பெற்றோருக்குக் கீழ்ப்படிதல் மற்றும் மரியாதை கொடுப்பதில் குறைவுப்படுகிறதாயிருக்கிறது. அந்த வீட்டில் நிச்சயமாக ஒழுங்கின்மை ஆட்சி செய்ய ஆரம்பிக்கும். இதனால் அந்த வீடு ஒரு சந்தோஷமில்லாத வீடாக ஆகிறது. இதுபோன்ற வீட்டில், அந்த குடும்பத்தில் எந்த ஒரு அங்கத்தினரிடமும் கிறிஸ்தவ குணாம்சம் வேரூன்றுவதோ அல்லது அபிவிருத்தியடைவதோ கடினமானதாக இருக்கிறது. இருப்பினும் சில நேரங்களில் இதுபோன்ற இடங்களிலும் கிறிஸ்தவ குணாம்சம் சிறிதளவில் நிலைத்திருக்கவும், அபிவிருத்தியடையவும் செய்கிறது.

அநேகப் பெற்றோர் தங்களுடைய குழந்தைகளின் இருதயமாகிய தோட்டத்தில் நன்றியின்மை, பெற்றோருக்குக் கீழ்ப்படியாமை, அன்பில்லாமை போன்ற மோசமான மனச்சார்புகளாகிய களைகள் செழித்தோங்கி வளருவதற்கு அனுமதித்து, அதில் நீதியான நியமங்களை வளர்ப்பதில் அவர்களது அலட்சியம் எவ்வளவு பயங்கரமானது என்பதை மிகவும் காலம் கடந்த பின்பே அறிகிறார்கள். ஒரு குழந்தையை நடக்க வேண்டிய வழியில், (நீதி. 22 : 6) அன்றாட ஜீவியத்தின்

**COURTESY BY :**
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

அத்தியாவசியமான விதிமுறைகளான, விசுவாசத்தை வெளிப்படுத்துகிற நம்பிக்கை, இச்சையடக்கம், பொறுமை, தேவபக்தி, தயை, நன்றியுணர்வு, சாந்தகுணம், நற்குணம், மற்றும் அன்பை கட்டளையின்படியேயும், மாதிரியின் படியேயும் பயிற்றுவிக்க வேண்டிய அவசியத்தை நாம் கிறிஸ்தவப் பெற்றோர்கள் மேல் மிகவும் கடுமையாக வற்புறுத்த முடியாது. இவைகளைப் பயிற்றுவிக்கும் பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு நீதியின்பாதையில் நல்ல துவக்கத்தைக் கொடுக்கிறார்கள். இந்தத் துவக்கம் அவர்களின் வாழ்க்கையில் அவர்கள் நுழைவதற்கு அவசியமானதாக இருக்கிறது. அதனைக் குழந்தைகளும் சமுதாயமும், தகப்பன்மார்களின் கரங்களில் எதிர்பார்க்க உரிமை உண்டு.



சாலமோன் ஓர் தகப்பனாக, நல்ல ஆலோசனைக்கு தன்னுடைய கவனத்தைக் கொடுப்பதின் மூலம், ஓர் ஞானமுள்ள தகப்பனுக்கு கீழ்ப்படியும் குமாரனின் ஆயுசின் வருஷங்கள் அதிகமாகும் என்று எடுத்துரைக்கிறார். பெற்றோர் தங்களுடைய ஜீவியம் முழுவதிலும் தங்களுடைய குழந்தைகளின் மீதான, அன்பும், மற்றும் அவர்களின் நலனுக்கான பெற்றோர்களுடைய ஆழ்ந்த விருப்பங்களும் வெளிப்பட வேண்டும். ஒரு குழந்தைத் தன்மையின் தன்னம்பிக்கையானது பெற்றோரின் புறக்கணிப்பு அல்லது பயமுறுத்தல், அன்பில்லாமல் நடத்தும்விதம் மூலமாக தகர்க்கப்படுகிற வரைக்கும், குழந்தையானது இயற்கையாகவே அதனுடையப் பெற்றோரை உயர்வாக எண்ணுவதற்கும், அவர்களுடைய புத்திமதியை மதித்துணரவும் முடிவு செய்கிறது.

பொதுவாகக் குழந்தைகள் தங்களைவிட வயது சென்றவர்கள் செய்வதை சரியாகவும், சில நேரங்களில் அதிகமாகவும் கூட நிதானித்து அறிகிறார்கள். (1) தங்கள் பெற்றோரின் அன்பிலும் மற்றும் அவர்களின் நலனில் அக்கறையுள்ளவர்களாயும், (2) சரியானபடி அவர்களின் வாழ்க்கையை துவக்குவதற்கு குழந்தையின் ஆரம்பக்கட்டத்தில் பெற்றோரின் வாழ்க்கையின் அனுபவங்கள் அவர்களுக்கு மதிப்புமிக்கதாய் இருக்க வேண்டும். இந்த இரண்டு நல்ல ஆதாரங்களின் வாயிலாக நிதானித்தறியத்தக்க திறனுடையவர்களாய் இருப்பார்கள். பெற்றோரின் அறிவுரை மூலம் வழிநடத்தப்பட்டு, உதவி பெறும் குழந்தை, நீண்ட ஆயுசுக்கான சரீர பலவீனத்திலிருந்தும், அதிகமான சுகவீனத்திலிருந்தும், வாழ்க்கையின் உபத்திரவங்களிலிருந்தும், மற்றும் ஆபத்து போன்ற அநேக கஷ்டங்களிலிருந்தும் காக்கப்பட மாட்டார்கள் என்று யார் சொல்லக்கூடும்?

மேலும் குழந்தைமீது அக்கறையுள்ளப் பெற்றோர் தன்னுடைய குழந்தைக்கு தனது சொந்த அனுபவ புத்தகத்திலிருந்து அனுபவப் பாடங்களைக் கொடுக்க நாடும்போது தன்னுடைய வெற்றிகள், ஏமாற்றங்கள், தன்னுடைய வாழ்வின் தவறுகள், மற்றும் விளைவுகள் ஆகியவற்றை சீர்தூக்கிப் பார்க்கும்போது தானும் அவைகளின் மூலம் பலனடைகிறான். ஒரு தகப்பனாக தனது கடமையை செய்கிறதினால் வருகிற ஆசீர்வாதமானது தனக்கு மாத்திரமல்லாமல், அவனுடைய குழந்தைக்கும் ஆசீர்வாதமாயிருக்கும். இதனால் அவனுடைய சொந்த ஆயுசின் வருஷங்கள் அதிகரிப்பது மாத்திரமல்லாமல் அவனுடைய குழந்தையின் ஆயுசின் வருஷங்களும் அதிகமாகும்.

தன்னுடைய வாழ்க்கையின் முடிவு காலத்தில் தன்னுடைய குழந்தையைப் பார்த்து "**ஞானமார்க்கத்தை நான் உனக்குப் போதித்தேன்: செவ்வையான பாதைகளிலே** [என்னுடைய மாதிரியின்படியே] **உன்னை நடத்தினேன்**" என்று நீதிமொழிகள் 4 : 11-ஐ உண்மையாய் பயன்படுத்துகிற எந்த ஒரு பெற்றோரும் எவ்வளவாய் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். இப்படிப்பட்ட வாழ்க்கையின் பாதையில் அவர்கள் தவறு செய்வதற்கு மற்றவர்களைவிடக் குறைவான சாத்தியமே உண்டு, பரலோகப் பிதாவினுடைய சத்தத்தைக் கேட்கவும், கவனிக்கவும் அதிகமாய் விரும்பி ஆயத்தமாய் இருக்கிற மற்றும் அவருடைய வழியில் நடக்க விரும்புகிற இதுபோன்ற குழந்தைகளும் எவ்வளவாய் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

உண்மையில் இந்த பாடத்தை தேவனுடைய பிள்ளைகளுக்கு நன்மை பயக்கக் கூடிய விதமாய் உபயோகிக்க, தேவனே இதை தம்முடைய பிள்ளைகளிடம் கூறுவதாகக் கருதலாம். பரிசுத்தமான காரியங்களில் நாம் பரலோகப் பிதாவைப் பிரதிபலிக்கிறவர்களாயிருக்கிறோம். நாம் பாவிகளாயிருக்கையில் அவர் நம்மை மீட்டுக் கொண்டார். மேலும் தம்முடைய அன்பு மற்றும் நீதியின் மூலம் இது வரையில், கிறிஸ்துவை மீட்பராக ஏற்றுக் கொண்டிருக்கிற அனைவரையும் தன்னிடம் கூட்டிச் சேர்த்தும் இருக்கிறார். பாவ மன்னிப்புக்காக கிறிஸ்துவிடம் வந்து அவருடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவதின் மூலமாக நாம் பிதாவினிடத்திற்கு வந்து சேர்ந்தோம். அப்போது பரலோகப் பிதா அவருடைய வார்த்தையின் மூலமாக "**என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா**" (நீதி. 23 : 26) என்றார். அதாவது, உன்னுடைய நேசம், உன்னுடைய அன்பு, உன்னுடைய விருப்பத்தை எனக்குத் தா என்று நமக்கு கூறினார். தங்களது விருப்பங்களை, அன்பு மற்றும் மனதைத் தேவனுக்குக் கொடுக்கிறவர்கள், தங்களுடைய எல்லாவற்றையும் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள். நன்மைக்கோ அல்லது தீமைக்கோ, நம்முடைய விருப்பங்களும் எண்ணங்களும் நம்மைக் கட்டுப்படுத்துகிறவைகளாக இருக்கின்றன.

தேவனுடைய அழைப்பை (ரோம. 12 : 1) நாம் ஏற்றுக் கொண்ட போது, நம்முடைய இருதயங்களையும், நம்முடைய எல்லாவற்றையும் அவருக்குக் கொடுத்து, அவருக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒருவராக, அவருடையவராய் இருந்து, அவருடைய நல்ல விருப்பத்தைச் செய்து வருகிறோம். அது, முதலில் நாம் தேவனிடம் அன்பு கூர்ந்ததினால் அல்ல, ஆனால் அது அவர் முதலாவது நம்மேல் வைத்த அன்பினாலேயாகும். நம்முடைய பாவங்களை ஈடுசெய்யும்படியாக தன்னுடைய குமாரனையே அவர் தந்தருளினார். (1 யோவா. 4 : 10). பரிசுத்த ஆவியைப் பெறுவதின் மூலமாக இப்போது பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாக அவருடைய குடும்பத்திற்

குள்ளும் நாம் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களாய் இருக்கிறோம். நாம் அவருடைய வார்த்தைக்கு செவிசாய்க்க வேண்டும் என்பதற்காக, அவருடைய குடும்பத்தினர்களுக்காக சால மோனின் பாஷையில் அவர் நம்மிடம் பேசுகிறார். இதைச் செய்கிறதின் மூலம் நம்முடைய ஆயுசின் வருஷங்கள் அதிகமாகும் என்றும், நித்திய ஜீவனுக்கு வழிநடத்தும் என்றும் அவர் நமக்கு வாக்குத்தத்தம் செய்கிறார்.

## தேவன், நம்முடைய போதகர்

"**ஞானமார்க்கத்தை நான் உனக்குப் போதித்தேன்: செவ்வையான பாதைகளிலே உன்னை நடத்தினேன்**" என்று தேவனால் போதிக்கப்பட்ட அனைவரும் நீதி. 4 : 11-ஐ தங்களுக்கும், தேவனுடைய குடும்பத்தினர் அனைவருக்கும் அதனை அப்பியாசிப்பதில் சாட்சியாக இருப்பார்கள். தேவனுடைய பிள்ளைகளாக அவருடைய அன்பில் நிலைத் திருந்து, தெய்வீகப் பாதுகாப்பு, மற்றும் புத்திமதியின் கீழ் தங்களை வைத்துக் கொண்டவர்கள், தெய்வீக பராமரிப்புச் சம்பந்தமாக தேவ வாக்கியங்களின் மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் மேல் சார்ந்திருக்கிற அனைவரும் வசனம் 12-ஐ ஒரு தீர்க்க தரிசனமாக நம்பிக்கையுடன் எதிர்நோக்கலாம். அவர்களுடைய நடைகள் ஆண்டவர் மூலமாக ஆவிக்குரிய வழியில் வழிநடத்தப்படும் என்றும், அவர்கள் இடறிவிழுவதில்லை என்றும் உறுதிப் படுத்தப்படுகிறார்கள். எவ்வளவு காலம் பின் பற்றுகிறார்களோ அவ்வளவு காலம் அவர்களை அந்தப் பாதையில் தேவனுடைய பராமரிப்பு வழிநடத்திச் செல்லும். தேவனிடத்தில் பிரதான மாக அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக் கேதுவாய் நடக்கும். (ரோம. 8 : 28).



அந்த குமாரன் ஒருவேளை வயது முதிர்ந்த மற்றும் அதிக அனுபவம் வாய்ந்த குமாரனாக இருக்கலாம், அவன் பரலோகப் பிதாவின் ஆவிக்குரிய குமாரனானாலும், பூமிக்குரியத் தகப்பனின் குமாரனானாலும், "**புத்திமதியை உறுதியாய்ப் பற்றிக்கொள், அதை விட்டுவிடாதே: அதைக் காத்துக்கொள், அதுவே உனக்கு ஜீவன்**" (வசனம் 13) என்ற சாட்சியத்தை அதிகமாக அவன் மதித்துணர வேண்டும்.

இதன் பிரகாரமாக அப்போஸ்தலர் சபையைப் பார்த்துக் கூறுவது என்னவென்றால் "**நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும்**" (எபி. 2 : 1) என்பதாகும். நாம் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்பதும் அல்லது நன்மையான மற்றும் நேர்மையான இருதயங்களில் அதனைப் பெற்றுக் கொள்வதும் மட்டுமே போதுமானதாகாது என்பது வெளிப்படையாயி ருக்கிறது. அதனை நாம் பற்றிக்கொள்ள வேண்டுமென்பதும் அவசியமாயிருக்கிறது. இப்படியாக இதனை நம்மில் ஓர் அவசியமான பகுதியாக இருக்கும்படி நாம் ஒருங்கிணைத்து, அதன்படி செய்துவந்தால் சத்தியத்தின் ஆவியானது தேவனுடைய பிள்ளைகள் எல்லாருடைய ஆவியாக ஆகும். அதாவது அவர்களிலுள்ள பரிசுத்த ஆவியானது, பரலோகப் பிதாவின் மனதிற்கும், விருப்பத்திற்கும், சித்தத்திற்கும், முழு இசைவாகவும், ஒத்ததாகவும், ஏற்றதாகவுமிருக்கும்.

## பக்கவழிகளின் ஆபத்து

ஆவிக்குரிய அல்லது பூமிக்குரிய குமாரர்களுக்கு, வசனம் 14-ல் கொடுக்கப்பட்டிருக்கிறதை விட நல்ல புத்திமதியாக வேறு என்ன புத்திமதி கொடுக்கப்பட முடியும்? சரியான பாதையில் நாம் எவ்வளவு தூரம் சென்றிருக்கிறோம் என்பது காரியம் அல்ல. ஏனெனில் அதிலிருந்து அநேகப் பாதைகள் பிரிந்து செல்கிறது என்பதையும், சுயவிருப்பம், பெருமை, உலகப்பிரகாரமான குறிக்கோள் மற்றும் சுயநலம் ஆகிய பாதைகள் நம்மை கவர்ந்து சரியான பாதையிலிருந்து நம்மை வழிவிலகச் செய்து சில நேரங்களில் ஆபத்துக்களிலும் பிரவேசிக்கச் செய்யும் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட பாதைகள் முதலில் சிறிதே வித்தியாசம் காணப்படுவதான சரியானப் பாதையிலிருந்து படிப்படியாக பிரிகிறது. ஆனால் படிப்படியாக அவைகள் அதிலிருந்து அதிகமதிகமாக பிரிந்து செல்கிறது. இதனை நீதி, சத்தியம், அன்பின் ஆவி ஆகியவற்றால் நிறைந்த எந்த ஒரு ஆண்டவருடைய பிள்ளைகளும், வேறுபட்ட ஆவி மற்றும் மனோபாவத்தின் மாறுதலை விரைவிலேயே அடையாளம் கண்டு கொள் வார்கள்.

குறிப்பாக இடுக்கமான பாதையிலிருந்து நம்மை வழிவிலகச் செய்கிற எதிராளியான வனின் விருப்பத்தின் அனைத்துவிதமான சூழ்ச்சிகளுக்கும் எதிராக, தேவனுடைய ராஜ்யத்தை நாடுகிற அனைவரும், மிகவும் விழிப்போடு இருப்பதற்கு தேவனுடைய வார்த்தையின் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். நாம் சம்பந்தங்கொள்கிற ஒவ்வொருவருடைய ஆவியையும் கவனித்து நம்மை நாமே காத்துக் கொள்வது நல்லது. பரிசுத்தம், தாழ்மை, தூய்மை மற்றும் அன்பின் ஆவியினிடத்திற்கு வழிநடத்தாத எந்தவொரு பாதையிலும் முன்னேறி செல்வதற்கு நாம் மறுக்க வேண்டும். நாம் ஒருவேளை தவறான பாதையில் பிரவேசித்தாலும்கூட நமது இருதயங்கள் அன்பு மற்றும் சத்தியத்தின் பிரமாணத்திற்கு இன்னும் உண்மையாயிருந்தால், நம்முடைய நடைகளைக் கண்டுபிடியாமலும், நமது நடைகளில் பின்வாங்காமலும், தொடர்ந்து தவறான பாதையில் நாம் முன்னேற வேண்டிய அவசியமில்லை. ஆனால் வச. 14-ல் சொல்லப்பட்டிருக்கிறபடி துன்மார்க்கருடைய பாதையில் பிரவேசியாமல் இருப்பது இன்னும் அதிக சிறந்ததாகும். ஒருமுறை பிரவேசித்து விட்டோமானால், சற்றேறக்குறைய கஷ்டங்களுக்குப் பின்னரே ஒருவேளை நமது பாதைகளைக் கண்டுபிடித்துத் திரும்ப இயலும். ஆனாலும் இந்த பக்கவழிகளில் பிரவேசியாம லிருப்பது பாதுகாப்பான பயணமாகும்.

## பேரார்வம் என்பது ஓர் அபாயகரமானப் பாதை

எதிராளியின் வஞ்சகங்களுள் ஒன்றான பேரார்வம் என்பது, ஓர் மனித குணமாகும். இதன் மூலமாய் பாவம் மற்றும் தப்பறையின் பாதைகளில் பலர் வழிதவறி, தங்களுடைய பிரதிஷ்டையின் பொருத்தனைகளுக்கு மாறாக வெகுதூரம்

வழிநடத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்வது என்னவெனில், "அது உண்மையற்றது என்று எனக்குத் தெரியும் என்றாலும் தீமையைப் பற்றிய அறிவு ஏதேனும் எனக்கு நன்மை பயக்கக்கூடியதா என்று பார்த்து அறிய வேண்டுமென்றிருந்தேன்" என்பார்கள். இதுவே ஆதித் தாயான ஏவாளின் தகாத பேரார்வம் மற்றும் ஜாக்கிரதையின்மை என்பதை நாம் நினைவு கூறுகிறோம். அவைகள் கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் முதன்முதலாக மீறுகிறவளாக கஷ்டத்திற்குள் அகப்படும்படி செய்தன. இது அப்போஸ் தலருடைய வார்த்தை களை நமக்கு நினைப்பூட்டுகின்றது. "**சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது போல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப் படுமோவென்று பயந்திருக்கிறேன்**" என்கிறார். (2 கொரி. 11 : 3). ஞானி, "**அதை வெறுத்துவிடு, அதின் வழியாய்ப் போகாதே; அதை விட்டு விலகிக் கடந்துபோ**" (நீதி. 4 : 15) என்று கூறி, தீமையில் தலையிடக்கூடாது, அதனை தொடக்கூடாது, தீமையை ருசிக்கக்கூடாது, தீமையினுடைய ஆதிக்கத்தின் எல்லைக்குள் தன்னை அனுமதிக்கக்கூடாது என்ற பாடத்தின் அவசியத்தை மனதில் பதியவைக்க நாடுகிறார். ***

# நெப்போலியன்

## முன்னறியப்பட்ட மனிதன்

**தானி. 11 : 35–45**

யாரேனும் ஓர் அதிபதி "மக்களுடைய விருப்பம்" என்பதை தன் ஸ்தானத்தில் இருந்து நிறைவேற்றுவாரா என்றால் அது நெப்போலியன்தான். நெப்போலியன் தன்னுடைய வாளின் வெற்றியால் அதனைப் பெற்றார்; வாளைக் கொலைக் கருவியாக்கி அல்ல; வாளை சிரச்சேதம் பண்ணும் இயந்திரமாக ஆக்கியும் அல்ல, ஆனால் பிரான்சின் எதிரிகளுக்கு எதிரான யுத்தம் என்ற வாளால் பெற்றார். பிரான்சு தேசத்தை எதிரிகளிடமிருந்து காப்பாற்றி தன்னுடைய தாய் நாட்டில் புரட்சியின் நன்மைகளைக் காத்ததால் பிரான்ஸ் தேசத்து ஜனங்கள் அவரைச் சக்கரவர்த்தியாகத் தேர்ந்தெடுத்தனர்.

### தாய்நாட்டிற்கு செய்த முன்னேற்றங்கள்

நெப்போலியன் பாங்க் ஆஃப் பிரான்சையும், பிரெஞ்சு பங்குச் சந்தையையும் (பங்கு பரிவர்த்தனை) ஏற்படுத்தியதுடன் எல்லோருக்கும் சமச்சீர் வரி விதிப்பு உள்ளதா என்பதை உறுதி செய்வதற்காக தேசீய மற்றும் வரித்துறையின் வாரியத்தையும் ஏற்படுத்தினார். அதன் விளைவாக பிரெஞ்சு விவசாயிகளின் வருமானம் வானளவு உயர்ந்தது. தேசத்தில் சிறந்த சேவை புரிந்தவர்களுக்கு சிறந்ததும் விசேஷித்ததுமான அங்கீ காரத்தைக் கொடுப்பதற்காக அவர் "லீஜியன் ஆஃப் ஹானர்" போன்ற விருதுகளை அவர் ஏற்படுத்தினார். இதைப் பெற்றுக் கொள்ளக் கூடியவர்கள் விஞ்ஞானிகளும், இசை அமைப் பாளர்களும் சட்ட சபையாளர்களும், எழுத்தாளர்களும் மற்றும் இராணுவ வீரர்களும் ஆவார்கள்.

### பிரான்ஸின் கிராமப் புறங்களில் முன்னேற்றங்கள்

பொதுப் பணித்துறையில் 20,000 மைல் தூரத்திற்கு தேசீய சாலைகளும், 12,000 மைல் தூரத்திற்கு பிராந்திய சாலைகளும் போடப்பட்டன. ஏறக்குறைய ஆயிரம் மைல் தூரத்திற்குக் கால்வாய்கள் வெட்டப்பட்டன. மத்திய தரைக் கடல்கரைப் பகுதியை ஒட்டி மாபெரும் கார்னைஸ் சாலை அமைக்கப்பட்டது. ஆல்ப்ஸ் மலையில் சிம்ப்பலான், செனீஸ் கணவாய்களின் வழியாக மலைச் சாலைகள் அமைக்கப்பட்டன. டான்கிர், செர்பாக் போன்ற துறைமுகங்களுடன் பல துறைமுகங்களும் ஆழப்படுத்தப்பட்டு விரிவாக்கப்பட்டன. சீரானதும்,நேரானதுமான சாலைகளும் பாலங்களும் நினைவுச் சின்னங்களும் பாரீஸ் நகரில் அமைக்கப்பட்டு அழகுப் படுத்தப்பட்டன. அதுமட்டுமல்லாமல் தேசீய ஆவண காப்பகம் நிலையான இடத்தைப் பெற்றது. நெப்போலியன் லாவரி என்ற ஊரை புணரமைத்தார். சாம்ராஜ்யம் முழுவதும் நினைவுச் சின்னங்கள் எழுப்பப்பட்டன. லுத்தரால் புகழ்பெற்ற ஸ்பேயரில் உள்ள இம்பீரியல் கதீட்ரல் போன்ற கட்டிடங்கள் பாதுகாக்கப்பட்டது, கொலானாஸ் கதீரட்ரலின் மர சிற்ப வேலைகள் நெப்போலியனது உத்தரவின் பேரில் தொடரப்பட்டது, உண்மையிலேயே நெப்போலியனால் முடிக்கப்பட்ட கட்டிடக் கலையின் கைவேலைகள் ரோமிலிருந்து வியன்னா வரை ஐரோப்பா முழுவதும் காணப்படுகிறது. தேசீய பொருளாதார முன்னேற்றத்திற்கான முக்கியமான திட்டங் களுக்காக பிரான்சில் ஆராய்ச்சி மையங்கள் துவங்கப்பட்டன. பிரெஞ்சு தொழில் துறையைப் பற்றிய புள்ளி விவரங்களையும் தகவல்களையும் கொடுப்பதற்காக தொழில் வாரியம் அமைக்கப்பட்டது, கரும்பு, பீட்ரூட் சாகுபடியினால் சர்க்கரைத் தொழில் வெற்றி அடைந்ததே முன்னுதாரணமாயிற்று.

### மத சமத்துவம்

மதத்தைப் பொறுத்தவரை, நெப்போலியன் 1801–ல் அபிப்பிராய பேதத்தால் ஏற்பட்ட பிரிவினைகளை முடிவுக்குக் கொண்டு வந்து கத்தோலிக்க சபையை இசைவு படுத்துவதின்மூலம் பிரான்ஸ்க்கு கொண்டு வந்தார். அவர் புராட்டஸ்டண்டு பிரிவினருக்கு சுதந்திரத்தையும் சம அந்தஸ்தையும் உறுதி செய்தார். யூதர்களுக்கு பாலஸ்தீனத்தில் தேசீயத் தாயகத்தை தன்னால் ஸ்தாபிக்க இயலாது என்பதை முழுமையாகத் தெரிந்த பின்னர் யூதர்களுக்கு பிரான்சையே தாயகமாக அறிவித்தார்.

## கல்வி

நெப்போலியனின் சட்டத்தொகுப்பு, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை ஏற்படுத்தியது. குடும்பத்தின் பரிசுத்தத்தைக் காக்கும்படி அழுத்திக் கூறியது. புரட்சியின் சட்டப்படியான நன்மைகளை உறுதி செய்தது. நெப்போலியன் வரையறுத்த சிவில் நடைமுறைச் சட்டங்கள் நீதிமன்றங்களில் பரவலாக நடைமுறைப்படுத்தும்படி உறுதி செய்யப்பட்டது. சட்டங்களும் நீதிமன்றங்களும் நடு நிலைமையாக்கப்பட்டது. பிரெஞ்சுக் கல்வியை நிர்வகிப்பதற்காக இம்பீரியல் யுனிவர்சிட்டியை நெப்போலியன் ஸ்தாபித்தார். நெப்போலியனது ஆட்சியின் கீழ் விசேஷித்த பொறியியல் மற்றும் தொழில் நுட்பப் பள்ளிகளுடன் இடைநிலைப் பள்ளிகளும் விஞ்ஞானக் கல்வியைப் பாதுகாக்க ஸ்தாபிக்கப்பட்டன. தாதிமார்கள் மற்றும் பிரசவம் சம்பந்தமான மருத்துவகலை பாடசாலைகளை ஸ்தாபித்தார். கால்நடை வைத்திய சாஸ்திரமும் நெப்போலியனின் கீழ் நேர்த்தியாக்கப்பட்டது.

## இராணுவ மேதை

இன்றைய இராணுவ வரலாற்றில் அநேகமாக உலகில் உள்ள எல்லா இராணுவக் கல்லூரிகளிலும் போதிக்கப்படும் "யுத்தக் கொள்கைகள்" என்று விவரிக்கப்படுபவைகளுக்கு நெப்போலியன் முன்னோடியாகத் திகழ்ந்தார். நெப்போலியன் தன்னுடைய சிறந்த இராணுவத்திற்காக சிருஷ்டித்து உபயோகப்படுத்தின அமைப்புகளை இன்றைய படைகள் அடிப்படையாகக் கொண்டுள்ளன. நெப்போலியன் தன்னுடைய முத்திரையை செயிண்ட் ஹெலினா தீவில் பதித்தார் என்று பல



*நெப்போலியன் சக்கரவர்த்தியாக முடிசூட்டப்பட்ட சமயத்தில், 1802-ல் அவரால் உருவாக்கப்பட்ட லீஜியன் ஆஃப் ஹானர் என்ற பட்டத்தின் கழுத்துப் பட்டயத்தை அணிந்திருக்கும் படம்.*

வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். உண்மையிலேயே இந்த முத்திரை பதிக்கப்பட்டது 1793-ல் டவுலனில் ஆரம்பித்தது. ஹாலண்ட் பிரபு பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையில் 1833-ல் மரித்துப் போன சக்ரவர்த்தியைப் பற்றி "இந்த மாமனிதரை வெறுக்கக்கூடிய ஜனங்கள்கூட இவரைக் குறித்து, பத்து நூற்றாண்டுகளாக இப்படிப்பட்ட அசாதாரண குணமுள்ள மனிதன் இது வரையில் பூமியில் தோன்றியதில்லை என்று அங்கீகரித்திருக்கிறார்கள்" என்று கூறினார். இது உண்மையிலேயே சக்கரவர்த்திக்கு மரியாதை செலுத்துவதாகும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரத்தை மேற்கோள்களாகக் காட்டி அதன் அடிப்படையில் ஆராய்ச்சி செய்வதைக் காட்டிலும் இரண்டாம் நிலை ஆதாரத்தைக் கொண்டு தகவல்களைப் பெற்று சோதனையை மேற்கொள்ளுவது எளிது. ஒரு எழுதப்பட்ட ஆவணத்திலிருந்து மேற்கோள் காட்டி வரலாற்று ஆசிரியர்கள் எந்த வித மறுப்பும் இல்லாமல் தொடர்ந்து மற்றவர்களைக் கொண்டு கூறப்பட்டால் உடனே அது "பொது அறிவு" என்ற அந்தஸ்த்தைப் பெறுகிறது. இந்த ஆராய்ச்சிகள் வரலாற்று ஆராய்சியாளர்களின் மதிப்பீட்டைச் சார்ந்துஏற்றுக் கொள்ளுவதில்லை. ஆனால் அடிப்படை ஆராய்சிகளை மட்டுமே ஏற்றுக் கொள்ளுகின்றனர். பல ஆண்டுகளாக செய்து முடிக்கப்பட்ட ஆராய்ச்சியின் அடிப்படையில் கெய்ரோ, அலெக்சாண்டிரியா, டெல் அவிவ், எருசலேம் போன்ற நகரங்களில் செய்யப்பட்ட அகழ்வாராய்ச்சிகள், நெப்போலியனைப் பற்றிய யூத இலக்கியங்களில் ஆராய்ச்சிகள் போன்றவைகளால் நெப்போலியனின் வரலாற்றின் இந்த பகுதியை இப்பொழுது நன்கு அறிந்து கொள்ள முடிகிறது.

## சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்

மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்காக நெப்போலியன் உருவாக்கிய பல காரியங்களில் ஒன்று அவர் உருவாக்கியவைகளில் மிகவும் விசேஷமானதும் ஒருவேளை நிலைத்து நிற்கக் கூடியதாக இருப்பது, இந்த சிவில் சட்டத்தின் தொகுப்பு ஆகும். அதை செயல்படுத்துவதற்காக தனிப்பட்ட தன்னுடைய பொறுப்பை அவர் உணர்ந்திருந்தார். சரித்திரத்தில் அந்த சமயத்தில் இனப் பாகுபாடும் வன்முறையும் மிகவும் அதிகரித்து இருந்தது. அப்பொழுது நெப்போலியன் யூதர்களையும், புராட்டஸ்டண்டுகளையும், ஃப்ரீமாசன் வகுப்பார்களையும் சுயாதீனமுள்ளவர்களாக்கி அவர்களுக்கும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்தைக் கொடுக்க முடிவு செய்தார். பல ஆண்டுகளாக மூடிக் கிடந்த தேவாலயங்களையும் கூட திறந்தார். ஐரோப்பாவில் முதன்முறையாக எல்லா மதத்திற்கும் சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவத்தை அனுமதித்த முதல் தலைவன் நெப்போலியன் ஆவார்.

கீழே உள்ள லித்தோ பிரிண்டிங் படத்தில், நெப்போலியன் யூதர்களுக்கு சுதந்திரம் அளிக்கிறார். 1804-ல் உருவாக்கப்பட்ட சட்டங்கள் அவர்களுக்கு மதச் சுதந்திரத்தை அனுமதித்தது. அந்த சமயத்தில் 480,000 கல்வீனியர்களும்,

200,000 லுத்தரன்களும் பிரான்ஸில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். 1804-ல் நெப்போலியன் புராட்டஸ்டண்டு சபைகளின் பொதுவான அமைப்புகளை ஒழுங்குப்படுத்தி அவர்களுடைய குருமார்களின் சம்பளத்திற்கு அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொள்ளுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

## அவர் துன்பங்களை ஒடுக்கினார்

நெப்போலியன் தன்னுடைய வாலிபப் பிராயத்திலோ அல்லது பிரான்சில் பள்ளிப் பருவத்திலோ ஒரு யூதனைக் கூட சந்தித்ததில்லை எனத் தெரிகிறது. யூத ஜனங்களின் அமைப்புகளுடன் உண்டான முதலாவது தொடர்பு 1793-ல் பிப்ரவரி 9-ம் தேதி இத்தாலியில் அவருடைய இத்தாலிய படையெடுப்பின் போது உண்டானது. நெப்போலியனும் அவருடைய படைகளும் அங்கோனாவில் நுழைந்தபொழுது யூத இனம் ஒரு சிறிய சேரி பகுதிக்குள் வசித்துக் கொண்டிருந்தது. அப்பொழுது சில ஜனங்கள் மஞ்சள் நிற தலைப்பாகையுடனும் மஞ்சள் வர்ணத்தில் "தாவீதின் நட்சத்திரம்" கொண்ட புஜப் பட்டையுடன் அங்கும் இங்கும் உலாவுவதை நெப்போலியன் கவனித்தார். அவர் தன்னுடைய அதிகாரிகளில் ஒருவரிடம் இவைகளின் உபயோகம் என்ன என்று கேட்டார். அதற்கு அந்த அதிகாரி இவர்கள் யூதர்கள்; ஒவ்வொரு சாயங்காலமும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தனி சேரி பகுதிக்கு திரும்பும்போது அது யூதர்கள் தான் என்பதை பிரித்துப் பார்க்கவே அணிவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பதிலளித்தார். மஞ்சள் நிற தலைப்பாகையும், புஜப்பட்டையும் நீக்கப்பட வேண்டும் எனவும் மூவர்ணத்தில் அலங்கார நகை அணியலாம் என்றும் உடனடியாக நெப்போலியன் ஆணையிட்டார். அவர் அந்த சேரிகளை மூடினார். யூதர்கள் எங்கும் சென்று வசிக்கலாம் என்றும் அவர்கள் தங்கள் மதத்தை வெளிப் படையாகவே அனுசரிக்கலாம் என்றும் உடனடியாக நெப்போலியன் ஆணையிட்டார். அன்கோனாவில் யூதர்களின் சேரிக்குள் வந்த முதல் பிரான்சு சிப்பாய்களைப் பார்த்து அவர்கள் யூதர்கள் என்பதை அறிந்து மிகவும் சந்தோஷமடைந்தார்கள். பின்னர் நெப்போலியன் ரோமிலுள்ள "யூதர்களுடைய சேரியையும் மூடினார்." வெனிஸ், வெரோனா, பதுவா போன்ற இடங்களில் வசித்த யூதர்களையும் விடுவித்தார். "இத்தாலியை விடுதலை செய்தவர்" விசாரணைச் சட்டங்களை ரத்துச் செய்தார், அதனால் யூதர்கள் இறுதியில் சுதந்திரமாக இருப்பதை உணர்ந்தனர்.

ஆர்வத்தைத் தூண்டும் இன்னொரு நிகழ்ச்சி, 1798-ல் ஜூன் 12 அன்று மால்தாவைப் பிரெஞ்சுக் காரர்கள் பிடித்தார்கள், அப்பொழுது கோவிலின் வீரர்கள், யூதர்களை அவர்களுடைய யூத ஆலயத்திற்குள் அவர்கள் மத சம்பிரதாயங்களைச் செய்வதற்கு அனுமதிக்கவில்லை. அந்த கோவில் வீரர்கள் யூதக் கைதிகளை அடிமைப்படுத்தி இரக்கமின்றி நடத்தினார்கள், அவர்களை விற்றார்கள். யூதர்களுக்கு ஓர் யூத ஆலயத்தை கட்டிக் கொள்ளுவதற்கு நெப்போலியன் உடனடியாக அனுமதி அளித்தார். இங்கே பொதுவாக அறியப்படாத ஆச்சரியமான காரியம் ஒன்று நடந்தது. பிரெஞ்சுப் படைகள் பாலஸ்தீனாவில் இருந்தன. அங்கே ஆக்ரி நகரத்தை முற்றுகையிடும்பொழுது நெப்போலியன் பாலஸ்தீனத்தை சுதந்திர யூத தேசமாக அறிவிப்பதற்கு ஆயத்தமாக இருந்தார். அவர் ஆக்ரியைக் கைப்பற்றி விடுவோம் என்பதில் நம்பிக்கையுள்ளவராக இருந்தார். அதை தொடர்ந்து வரும் நாட்களில் எருசலேமிற்குள் நுழைந்திருப்பார். அங்கே அவர் அறிவிப்பை வெளியிட்டிருப்பார். பிரிட்டிஷாரின் தலையீட்டால் இந்தத் திட்டத்தை செயல்படுத்த முடியவில்லை. அந்த அறிவிப்பு 1799 ஏப்ரல் 20-ம் தேதியிடப்பட்டு அச்சிடப்பட்டிருந்தது, அக்ரி நகரத்தைக் கைப்பற்றும் முயற்சி தோல்வியடைந்ததால் இந்த அறிவிப்பு வெளியிடப்படுவது தடை செய்யப்பட்டது. பாலஸ்தீனாவை யூதர்களின் தாயகமாக அறிவிப்பதற்கு கிட்டத்தட்ட 150 ஆண்டுகள் வரை யூதர்கள் காத்திருக்க வேண்டியதாயிற்று. ஆயினும் இந்த அறிவிப்பு சம்பந்தமான விஷயம் பலனளித்தது. இது சீயோனிச இயக்கத்திற்கு முன்னோடியாக அமைந்தது. யூத தேசம் அமைய வேண்டியதின் உயர்வான காரணத்தை அறிய வைத்தது. நெப்போலியன் வெளியிட்ட கருத்துக்கள் பலருடைய புகழ்ச்சியைப் பெற்றது. நெப்போலியனது கணிப்புகள் யூதர்கள் தங்களுடைய தாயகத்திற்கு திரும்பு வார்கள் என்று முன்னறிவித்த வேதாகமத் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக இருக்கிறது என்பதைக் கண்டவர்கள் பாராட்டினார்கள். இந்த கருத்து குறிப்பாக இங்கிலாந்தில் அநேக ஆதரவாளர்களை ஏற்படுத்தியது.

## தேசீயம்

நூற்றுப் பதினெட்டு ஆண்டுகள் கழித்து "பால்ஃபர்" அறிக்கையை பிரிட்டிஷார் வெளியிட்டனர். அதில் யூதர்களின் தாயகத்திற்காக அழைப்பு விடுத்தனர். இறுதியாக 31 ஆண்டுகள் கழித்து 1948-ல் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் சபையின் மிகுந்த வாக்குகளால் இஸ்ரேல் சர்வ சுதந்திரமுள்ள தேசமாக அங்கீகரிக்கப்பட்டது. 1799-ல் பஸ்காவின் முதலாம் நாளில் நெப்போலியன் அறிவித்த ஏற்ற சமயத்திற்கு முந்தைய அறிவிப்பானது இஸ்ரேல் தேசம் உருவாவதற்கு முக்கியப் பங்கு வகித்தது. பாரிசில் மானிட்டர் யுனிவர்சலில் VIII ஆண்டின் 3-ஆவது பிராய்ரியலில் (அதாவது 22 மே 1799-ல்) இவ்வாறு அறிவிக்கப்பட்டது.



அதில் "நெப்போலியன் போனபார்ட் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதன்படி ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவிலுள்ள யூதர்கள் அனைவரும் பழமையான எருசலேமை மறுபடியும் உருவாக்குவதற்கு தன்னுடைய கொடியின் கீழ் ஒன்றாகச் சேர வேண்டும் என்று அழைக்கிறார்.

அலெப்போவை மிரட்டுவதற்காக அவர் முன்னமே படைகளுக்கு அதிக அளவில் ஆயுதங்களைக் கொடுத்துள்ளார்" என்று இருந்தது. 1800 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ம் தேதி நெப்போலியன் "நான் யூதர்களின் தேசத்தை ஆட்சிபுரிந்தால் சாலமோன் தேவாலயத்தை மறுபடியும் எடுப்பித்துக் கட்டுவேன்" என்று அறிவித்தார்.

## "நெப்போலியன் ஏன் இதனைச் செய்தார்?"

இது எந்த விதமான அர்த்தத்தையும் கொடுக்கவில்லை. ஏனெனில் இதில் அவருக்கு அரசியல் இலாபமும் இல்லை. இருந்த போதிலும் அதற்குரிய பதிலை நெப்போலியன், டாக்டர். பேரி ஓ மியராவுடன் செயிண்ட் ஹெலினாவில் தனிப் பட்ட உரையாடலில் காணலாம். 1816-ஆம் ஆண்டு நவம்பர் 10-ம் தேதி டாக்டர் மியரா (நெப்போலியனின் அப்போதைய தனிப்பட்ட வைத்தியர்) எந்த விதமான குறுக்கீடும் இல்லாமல் சக்கரவர்த்தியிடம் ஏன் அவர் யூதர்களை உற்சாகப்படுத்தி ஆதரித்தார் என்று கேட்டார். அதற்கு நெப்போலியன் இவ் விதமாக பதிலளித்தார்.

*"என்னுடைய முதன்மையான விருப்பம் யூதர்களை விடுதலையாக்கி, அவர்களை முழுமையான குடிமக்கள் ஆக்குவதே. கத்தோலிக்கர்களும் புராட்டஸ்டெண்டுகளும் அனுபவிக்கிற சமத்துவம், சுதந்திரம் சகோதரத்துவம் ஆகிய சட்டப்பூர்வமான உரிமைகளை யூதர்களுக்கும் அளிக்க விரும்பினேன். நாம் அனைவரும் யூத மதத்தின் பகுதிகளாக இருப்பதால், யூதர்கள் சகோதரர்களைப் போல நடத்தப்பட வேண்டும் என்பது என் விருப்பமாகும். இது பிரான்சு தேசத்திற்கு பல ஐசுவரியங்களைக் கொண்டு வரும் என எண்ணுகிறேன். ஏனெனில் யூதர்கள் மிக அதிகமாக உள்ளார்கள். அவர்கள் நமது நாட்டிற்கு அதிகமான எண்ணிக்கையில் வந்திருக்கக் கூடும். மற்ற எந்த நாட்டைக் காட்டிலும் இங்கே யூதர்கள் மிகுதியான சிலாக்கியத்தைப் பெறுகிறார்கள் என எண்ணு கிறேன். 1814-ல் உண்டான நிகழ்வுகள் இல்லாமல் ஐரோப்பாவில் உள்ள பெரும்பான்மையான யூதர்கள் பிரான்சிற்கு வந்திருக்க முடியும். ஏனெனில் இங்கே அவர்களுக்காக சமத்துவமும், சகோதரத்துவமும், சுதந்திரமும் காத்திருந்தது. இங்கே தான் யூதர்கள் இந்த தேசத்திலுள்ள ஒருவரைப் போல இருக்க முடியும்."*

நெப்போலியனுடைய வாழ்க்கையில் பல்வேறு கால கட்டங்களில் யூதர்களுக்கான இரக்கம் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. கத்தோலிக்கர்களும் புராட்டஸ் டண்டுகளும் நடத்தப்படுவது போல யூதர்களும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பதை அவர் உறுதி செய்வதற்காக ஒவ்வொரு காரியத்தையும் செய்தார். 1783-ல் நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சி பல்வேறு தடைகளை மாற்றியது. பிரான்சில் இருந்த யூதர்கள் அதை சந்திக்க வேண்டியதாயிற்று. 1791 செப்டம்பர் 27-ம் தேதி ஒரு ஆணை மூலம் பிரான்சில் உள்ள யூதர்கள் முழுக் குடியுரிமை பெற்றார்கள். இருந்த போதிலும் சட்டசபை புதிதாக யூதர்களுக்கு அளித்த சுதந்திரத்தை செயல்படுத்துவதற்கு எந்த விதமான விசேஷித்த நடவடிக் கையையும் எடுக்கவில்லை. நேஷனல் கன்வென்ஷன் என்ற அமைப்பு, யூத ஆலயங்களை மூடி, எபிரேய மொழியைத் தடை செய்தது. இது பொதுவாக யூதர்களுடைய வாழ்க்கையைக் கடினமாக்கியது. நிர்வாக சபையின் அதிகாரத்தின் கீழ் யூத ஆலயங்கள் மறுபடியும் திறக்கப்பட்டன. யூதர்கள் வியா பாரத்திலும், அரசியல் வாழ்விலும் ஈடுபட்டனர். இருந்த போதிலும் பொதுவாக ஓரளவு இடங்கொடுக்கப்பட்டார்கள். நெப்போலியன் பிரெஞ்சு அரசாங்கத்தின் தலைமைப் பொறுப்பை எடுத்துக் கொள்ளும் வரை யூதர்களின் நிலைமை மற்றவர்களைச் சார்ந்து நிச்சயமற்ற நிலையிலும் அவர்களுக்கு எதிரான சட்டங்களுக்கு தங்களை ஒப்புக் கொடுக்க வேண்டியதுமாயிற்று. பிரான்சில் சில குறிப்பிட்ட பகுதிகளில் சில சமயங்களில் சுதந்திரமாக நடத்தப்பட்டனர். மற்ற சமயங்களில் கொடுமையான முறையிலும் நடத்தப்பட்டனர். நெப்போலி யனின் மதக் கருத்துக்கள் தற்காலத் தத்துவ சாஸ்திரங்களைப் போல உயர்வானவைகள், அவர் முழுமையான மதச் சுதந் திரத்தைக் கொடுத்தார். எங்கெங்கு நெப்போலியன் சென் றாலும், அங்கெல்லாம் மதச் சுதந்திரத்தைக் கொடுத்தார். எங்கெங்கெல்லாம் பல மதங்கள் நிலவுவதைக் கண்டாலும் முதலில் ஒருவர் மற்றவர் மீது செலுத்திய ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார். "விசுவாசம் என்பது சட்டத்தின் வரம்பிற்கு அப்பாற்பட்டு மனிதனுடைய தனிப்பட்ட சொத்தாக இருக்கிறது. அதைப் பற்றிக் கேட்பதற்கோ அல்லது விளக்கம் கேட்பதற்கோ எந்த மனிதனுக்கும் உரிமை கிடையாது" என்று நெப்போலியன் சொல்லுவார். யூதர்கள் தங்களுடைய எருசலேமை அங்கே பிரான்சில் கொண்டிருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

தொடரும்.....

ரசல் போதகரின்
S.Vol -3 "உம்முடைய ராஜ்யம் வருவதாக" பார்க்கவும்.
pp-40; 1-47; 2.





# இஸ்ரவேலும் யாக்கோபின் இக்கட்டும்

ISRAEL AND JACOB'S TROUBLE

*(நமது ஜனவரி 2011 BS தமிழ் வெளியீடு 7-ல் உள்ள இந்த பாடத்தின் இரண்டாம் பகுதி)*

யாக்கோபின் இக்கட்டு காலத்தின் முதல் பகுதியைக் குறித்து நாங்கள் ஓரளவிற்கு குறிப்பிட்டிருக்கிறோம். அது, இஸ்ரயேலுக்கென ஒரு சுயதேசத்தை பெற்றுக் கொள்ளு வதற்காக செயல்பட்ட சீயோனிஸ இயக்கத்தின் ஆரம்பமாகும். இந்த பணியினை நிறைவேற்றுவதற்கென்று எடுக்கப்பட்ட முயற்சிகளானது, நமது ரஸல் போதகரால் குறிப்பிடப்பட்டிருந்த தீர்க்கதரிசன வாக்கியங்களின்படி பெருமளவில் நிறைவேறி விட்டன. இந்த பாடத்தின் முதல் பகுதியிலே தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்ட மீன்பிடிக்கிறவர்களைப் பற்றி (எரே. 16 : 16) ஆராய்ந்தோம். "மீன்பிடிக்கிறவர்களை" பற்றி இன்னும் அதிகமான விளக்கத்தைக் கொடுக்க இயலும். ஆயினும் இப்போது அதே வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற "**வேட்டைக்காரர்களை**"பற்றி பார்க்கலாம். எரே. 16 : 16-ம் வசனத்தை நீங்கள் கவனமாக பார்த்தால் அதில் "மீன்பிடிக்கிறவர்கள்" முதலிலும், "வேட்டைக் காரர்கள்" அதற்கு அடுத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதை காண முடியும்.



இந்த அமைப்பானது, ஒன்று முடிந்து , இன்னொன்று ஆரம்பிப்பது போன்று இல்லை. ஆனாலும் அது அவ்வித ஒழுங்கிலேயே உள்ளது. ரஷ்யாவில், மகா பெரிய புரட்சியின் காலத்திலே அநேக முறை யூத ஜனங்களுக்கு அதிகமான துன்புறுத்தல்களும் உபத்திரவங்களும் ஏற்பட்டது, குறிப்பாக இரண்டாம் உலக மகா யுத்தத்திலே, ஆக்ஸிஸ் பவர்ஸ் (Axis Powers) என்ற பிரிவின் கீழிருந்த கொடுங்கோல் அரசாட்சி செய்த இத்தாலி மற்றும் ஜெர்மனியின் நாஸி படையினாலும் லட்சக்கணக்கான யூதர்கள் ஐரோப்பாவின் பல பகுதி களிலிருந்தும், போலந்திலிருந்தும் மற்றும் பல நாடுகளிலு மிருந்தும் வெளியேற்றப்பட்டு விஷவாயு செலுத்தப்பட்ட அறைகளில் போடப்பட்டு இலட்சகணக்கானோர் கொல்லப் பட்டனர். இவைகளெல்லாம் வேட்டைக்காரர்களை பற்றிய நிறைவேறுதலாக இருக்கின்றது என்று நாம் காண்கிறோம். இப்படிப்பட்ட அழிவுகளெல்லாம் தேவனால் அனுமதிக்கப் பட்டிருந்தது. எப்படியென்றால் தமது ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுவதற்கு தேவன் இந்த ஜனங்களை இவர்களுடைய சொந்த தேசத்திற்கு அதாவது பாலஸ்தீனாவிற்கு வரவழைப் பதற்காகவே இவைகள் அனுமதிக்கப்பட்டது. இந்த சம்பவங்கள் மிகவும் கடுமையானவைகளாக இருந்ததினால் சிலர்மட்டுமே பரிசுத்த நகரத்திற்குள் குடியேறி தஞ்சம் அடைந்தனர். ஒரு யூத ஜனக்கூட்டத்தினிடத்தில் நாம் இவ்விதமாய் பேசும்போது அவர்கள் அவமானப்பட்டு போவார்கள். ஏனென்றால் அவர்களுடைய பாவங்களுக்காகவும் அவர்களுடைய அக்கிரமங் களுக்காகவுமே, தேவன் இந்த நீதியான தீர்ப்புகளை அனுமதித்தார். இன்னும் வெகு சீக்கிரத்திலே தேவன் இவர்களது குருட்டாட்டத்தை நீக்கிப் போடுவார். அப்போது இவர்கள் தங்கள் மேசியாவை அங்கீகரிப்பார்கள் (ரோம. 11 : 25, 26). இஸ்ரவேல் மேல் வரும் அனைத்து இக்கட்டுக்களையும் நாம் கண்ணோக்கி கொண்டிருக்கிறோம். குறித்தகாலத்தில் யூதர்களுக்கு ஒரு துன்பமும், ஒரு இக்கட்டும்கூட இல்லாமல் போய்விடும். இவை அனைத்திற்கும் பிற்பாடு, வேதவாக்கியங்களின் படியாக அவர்களுக்கு இன்னொரு பேராபத்து அவர்கள் மேல் எழும்பும். வேதாகமம் குறிப்பிடுகிற பிரகாரமாக யாக்கோபின் இக்கட்டின் கடைசி பகுதி இனிமேல் தான் சம்பவிக்கும். பல நாடுகளிலிருந்து மகா பலமுள்ள இராணுவம் கூடி நின்று எருசலேமைக் கொள்ளையடிக்கவும் அதனை அழித்துப் போடவும் அதனை சூறையாடவும் நாடுவார்கள். வேதவாக்கியங்களின்படி இந்த ஜாதிகள் கோகு, மாகோகு என்று அழைக்கப்படுகின்றன. இவை இஸ்ரயேலுக்கு எதிராக எழும்பும் மிகப் பெரிய இந்த இராணுவத்தையும் தலைமை தாங்குகிறவைகளையும் குறிக்கின்றன.

"**நான் கொள்ளையிடவும் சூறையாடவும், மதில் களில்லாமல் கிடக்கிற கிராமங்களுள்ள தேசத்திற்கு விரோதமாய் போவேன். நிர்விசாரமாய் சுகத்தோடே குடியிருக்கிறவர்களின் மேல் வருவேன். அவர்கள் எல்லாரும் மதில்களில்லாமல் குடியிருக் கிறார்கள். அவர்களுக்கு தாழ்ப்பாளும் இல்லை, கதவுகளும் இல்லை என்பாய்** (அராஜகத்தில் மீந்திருப்போர்)" எசே. 38 : 12-ல் இப்படியாக வேதவாக்கியம் சொல்லுகின்றது.

யுத்த நாளிலே சம்பவிப்பதை தேவன் எவ்விதம் வேதவாக்கியங்களின் நிலைப்பாட்டிலிருந்து குறிப்பிட்டிருக் கின்றார் என்று கீழ்கண்ட வேதவாக்கியத்தின் மூலம் நாம் பார்க்க

முடியும், "**இதோ கர்த்தருடைய நாள் வருகிறது, உன்னில் கொள்ளையானது உன் நடுவிலே பங்கிடப்படும். எருசலேமுக்கு விரோமதாக யுத்தம் பண்ண சகல ஜாதிகளையும் கூட்டுவேன் ........... கர்த்தர் புறப்பட்டு, யுத்தநாளிலே போராடுவது போல் அந்த ஜாதிகளோடே போராடுவார்**" (சகரி. 14 : 1 - 4). இது இன்னும் நடந்தேறவில்லை. எருசலேமை வீழ்த்த, அரபியர்கள் மீண்டும் மீண்டும் முயற்சி செய்தாலும் வெற்றியை காண முடியவேயில்லை. இந்த இக்கட்டினின்றும் முடிவாக தேவன் இஸ்ரயேலை மீட்கப்போகிறார் என்று இனிசம்பவிக்கப்போகிற இதனைக் குறித்தும் தேவன் குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்த சம்பவங்கள் ஆரம்பமானதை குறிப்பிடும் வகையில் இன்னொரு குறிப்பும் உள்ளது, அதாவது பழைய ஏற்பாட்டிலே தீர்க்கதரிசனங்களைப்பற்றி சொல்லப்படும் போது, "அந்நாளிலே" (In that day) என்றும்"**அந்த நாள்**" (that day) என்றும் "**அந்நாளின்போது**" (At that day) என்றும் சொல்லப்பட்டிருப்பவை எப்போதுமே ஆயிர வருஷ யுகத்தின் காலப்பகுதிகளை அர்த்தப்படுத்தகிறதாக இருக்கும். இது ஒரு வேளை பரோஷியா காலமாக இருக்கலாம் அல்லது பரோஷியாவும், எபிபெனியும் சேர்ந்த காலமாகவும் இருக்கலாம் அல்லது ராஜ்யத்தை அர்த்தப்படுத்தும் பெசலியாவாகவும்கூட இருக்கலாம். இது கீழ்கண்ட வசனத்தின் பிரகாரம் சொல்லப்படுகிறது "**அந்நாளிலே நான் எருசலேமை சகல ஜனங்களுக்கும் பாரமான கல்லாக்குவேன்**" (சகரி. 12 : 3, 10). மத்திய கிழக்கு பகுதியில் இருக்கிற ஜனங்கள், இன்றைக்கு சகல ஜாதிகளுக்கும் பாரமான கல்லாக இருக்கிறார்களா? தாங்கள் என்ன செய்வது என்று அந்த ஜாதிகள் அறியாதிருக்கின்றனர். "**அதை கிளப்புகிற யாவரும் சிதைக்கப்படுவார்கள். பூமியிலுள்ள ஜாதிகளெல்லாம் அதற்கு விரோதமாய் கூடிக் கொள்வார்கள்**" (வசனம் 3). இந்த சிறிய தேசத்திற்கு விரோதமாக அநேக இராணுவப்படைகள் இந்த பலமான தாக்கதலுக்கு இணைய இருக்கின்றன.

நாம் தொடர்ந்து சகரி. 12 : 10-ம் வசனத்தை பார்க்கலாம், இங்கு "**நான் தாவீது குடும்பத்தாரின் மேலும்** (அடையாளமான தாவீது இஸ்ரயேலர், யூத ஜனங்கள்) **எருசலேம் குடிகளின் மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்,**" என்று தேவன் சொல்லுகிறார். ஆக இஸ்ரயேலர் மீது எழும்பும் இந்த கடுமையானதும், பேராபத்துமான சூழ்நிலையில் தேவன் அவர்களை ஆசீர்வதிக்கப் போகின்றார். "**அப்பொழுது அவர்கள்** (யூத ஜனங்கள்) **தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்ப்பார்கள்**" என்று சொல்லப் பட்டுள்ளது. சிலர் இந்த வசனத்தை பார்த்து இது சரியானது அல்ல என்று சொல்லுவார்கள், ஏனென்றால் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து யூதர்களால் குத்தப்படவில்லை, ரோம போர் வீரர்களே இயேசுவின் கைகளிலும், கால்களிலும் ஆணி அடித்தனர், இதுவே உண்மையாயிருக்க தேவன் இங்கு இஸ்ரயேலரையா? அல்லது ரோமரையா? யாரைக் குற்றப்படுத்துகிறார்? ரோமரைப் பார்க்கிலும் இஸ்ரவேலரையே அதிகம் குற்றப்படுத்துகிறார். மத். 27 : 24-ல் பிலாத்து, தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாக கைளைக் கழுவி, "**இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்**" என்று சொல்லியிருக்கிறதையும் நாம் கவனிக்க வேண்டும். இந்த பிலாத்து தான் செய்ய வேண்டிய கடமைகளில் தன் கையை கழுவி விடவில்லை, ஏனெனில் இவன் இயேசுகிறிஸ்துவின் ஜீவனை காப்பாற்றுவதற்கு அதிகாரம் கொண்டவனாக இருந்தும், அதில் அவன் தோல்வியுற்றான். அவன் தன்னுடைய அதிகாரத்தை செயல்படுத்தவில்லை. பெரிய கலகம் ஏற்பட்டு விடுமோ என ஜனங்களினிமித்தம் அவன் பயந்தான். அவனிடத்தில், ரோம போர் வீரர்களும், தடுத்து நிறுத்தக்கூடிய அதிகாரங்களும் கொண்டவனாக இருந்தும்கூட ஓர் கலகம் ஏற்பட்டால் அது சக்கரவர்த்தியின் பார்வையில் மோசமாக இருக்கும் என்று சந்தேகமின்றி எண்ணியதால் அவன் தலையிட்டு இயேசுவின் ஜீவனைக் காப்பாற்றாமல் விட்டு விட்டான். இது எதனால் என்பது நமக்குத் தெரியும் ஏனெனில் இயேசுகிறிஸ்து மீட்கும் பொருளாக மரித்தாக வேண்டியிருந்தது. ஆயினும் இந்த சிறிய அனுபவத்திலும் பிலாத்தும்கூட ஓர் பொறுப்பாளியாகவேதான் இருந்தான். அவன் தண்ணீருள்ள பாத்திரத்திலே தனது கைகளை கழுவி "**இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்**" என்று சொன்னது சுலபமாகும்.

"**அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்ப்பார்கள்**" என்று வாசிக்கிறோம்; ஆகையால் இந்த பாவத்தில்



யூத ஜனங்களும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பாவம் யாரைச் சேர வேண்டுமோ அவர்களையே தேவன் குற்றப் படுத்துகிறார். நமது கர்த்தருடைய மரணத்திற்கு வேறு எந்த ஜனங்களையும்விட இஸ்ரவேலரே பொறுப்பாளிகளாவர். "அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்ப்பார்கள்" என்று வசனம் கூறுவதால், இது இனி சம்பவிக்க போகின்ற விஷயம் என்று நாம் அறிகிறோம், அப்போது யூத ஜனங்களின் இருதயம் மாற்றப்படும். அந்த இருதய மாற்றம் இந்த வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது (சகரி. 12 : 10; யோவா. 19 : 37). ஆம்,"**ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காக புலம்புகிறது போல அவருக்காக புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறது போல அவருக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்**". இப்படியாக யூத ஜனங்கள் இயேசுகிறிஸ்து மரணமடைவதற்கு தாங்கள் காரணமாயிருந்தற்காக வருத்தப் பட்டு மனம் வருந்துவார்கள். அந்த அனுபவத்தின் விளைவாக நித்திய ஆசீர்வாதம் ஏற்படும்.

இஸ்ரவேலர் ஏற்கும் இந்த அனுபவமே இன்று உலகத்திலே உள்ள முக்கிய காலங்களின் அடையாளமாகும் என்று நாம் கருதலாம். ராஜ்யத்தை நாம் நெருங்க நெருங்க

சம்பவிக்க இருக்கும் பல்வேறு காரியங்களைக் குறிப்பிடுவதற்காகவே காலங்களின் அடையாளங்கள் வேதாகமத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது. நாம் நமது பள்ளிக்கூடங்களிலே படிக்கும் போது, அந்த காலங்களின் அடையாளங்கள் என்ற பொருளுக்கு பதிலாக தற்போதைய நிலவரங்கள் என்ற பெயரை உபயோகித்தோம். நாம் வழக்கமாக வகுப்பிலே எழுந்திருந்து அன்றைய நாள்வரையிலான நிலவரங்களை மாணவர்கள் மத்தியில் அறிவித்து வந்தோம். இதைப் போன்றே, காலங்களின் அடையாளங்களைப் பற்றி வேதாகமத்தில் கொடுக்கப் பட்டிருக்கின்றன. நமதாண்டவர் பரிசேயரையும், சதுசேயரையும் கடிந்துக் கொண்டு சொல்லும் போது. "**மாயக்காரரே வானத்தின் தோற்றத்தை நிதானிக்க உங்களுக்கு தெரியுமே காலங்களின் அடையாளங்களை நிதானிக்க உங்களால் கூடாதா?**"என்றார் (மத். 16 : 3).

"செவ்வானம் இரவில் இருந்தால் அது மாலுமிக்கு சந்தோஷமான ஒன்றாகும். செவ்வானம் பகலில் இருந்தால் அது மாலுமிகள் முன்னெச்சரிக்கையாக எடுத்துக் கொள்வார்கள்" என்று இன்றைய நாளில் நாம் கூறுகின்றோம் இதையே தான் நமதாண்டவர் அன்றைக்கு வேறுவிதமாகக் கூறினார். மறு பக்கத்தில் பரிசேயர்களும், சதுசேயர்களும் எப்படியாவது நமது ஆண்டவரை சோதிக்கும்படி அவரிடத்தில் வந்து, "நீ தேவனிடத்தில் இருந்து வந்தவரென்றால் ஓர் அடையாளத்தை எங்களுக்கு காண்பிக்க வேண்டும்" என்று கேட்டார்கள். இவர்கள் இதனை எப்படி கேட்டிருப்பார்கள் என்று உங்களால் சிந்திக்க முடியுமா? "எங்களுக்கு ஓர் அடையாளம் வேண்டும், ஆகையால் அடையாளத்தைக் காட்டும்." இந்த பரிசேயர்கள் நமதாண்டவரிடம் ஒரு அடையாளத்தை கேட்டதை பற்றி நாம் பார்க்கும் போது, இது பழைய ஏற்பாட்டு காலத்தில் நடந்த ஒரு சம்பவம் ஆகும். உதாரணத்திற்கு, எலியா தீர்க்கதரிசியோடுகூட பாகாலின் ஆசாரியர்கள் போட்டியிட்டதையும், பாகாலின் 450 தீர்க்க தரிசிகளும் பலியிடும் விதத்தில் எப்படி எலியா இவர்களை கூட்டினார் என்பது சம்பந்தமாகவும் இது இருக்கிறது. தங்களுடைய பலிகளைக் கொண்டுவரும்படியாக அவர்களை எலியா அழைத்தார். இந்த ஆசாரியர்கள் தங்கள் விக்கிரக தெய்வங்களிடம் அங்கீகாரம் பெற, தங்கள் பலிகளை பட்சிக்கவும், தங்களுடைய வல்லமையை காண்பிக்க தங்கள் விக்கிரக தெய்வங்களுக்கு செய்ய வேண்டிய சடங்காச்சாரங்கள் அனைத்தையும் செய்தனர், ஆனால் இவர்களுடைய முயற்சி வெற்றியடையாமல் போனது. அடுத்து எலியாவிற்கான சந்தர்ப்பம் வந்தது. அப்பொழுது எலியா தகர்க்கப்பட்ட கர்த்தருடைய பலிபீடத்தில் தனது பலியை வைத்து பலிபீடத்தைச் சுற்றிலும் ஒரு வாய்க்காலை உண்டுபண்ணினார். அவருக்கு உதவி செய்த உதவியாளர்களான ஜனங்கள் அவருடைய பலியிலே தண்ணீர் ஊற்றினர். (1 ராஜா. 18 : 21-35). தன்னுடைய இந்த பலி பட்சிக்கப்படுதலானது எதிர்பாராதவிதமாக நடைபெறப் போவதில்லை ஆனால் அது உண்மையாகவே நடக்கப் போகின்றது என்பதனை எலியா அவர்களுக்கு காண்பிக்க விரும்பினார். பிறகு யெகோவா தேவனிடம் அவர் ஜெபம் செய்தார், "**அப்போது பரலோகத் திலிருந்து அக்கினி இறங்கி அந்த சர்வாங்க தகன பலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும், பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது.**" எலியாவின் பலியை தேவனுடைய அக்கினி பட்சித்துப் போட்டதானது, தேவன் பலியை அங்கீகரித்தார் என்று வெளிப்படுவது மட்டுமல்லாமல், இஸ்ரவேலுக்கான உண்மை யான தீர்க்கதரிசியாக எலியாவை தேவன் அங்கீகரித்தார் என்பதும் வெளிப்படுத்தப்பட்டது. (1 ராஜா. 18 : 38, 39).

இவைகளை மனதில்வைத்தே பரிசேயரும், சதுசேயரும் இயேசுகிறிஸ்துவினிடத்தில் தங்களுக்கு அடையாளம் வேண்டுமென்றும். இதனை அவரால் செய்ய முடியாது என்றும் எண்ணியே இதனை கேட்டார்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. தேவனிடத்திலிருந்து அப்படிப்பட்ட ஒரு வெளிப்பாட்டை கொடுக்கக்கூடிய காலம் அதுவல்ல என்பதை நமதாண்டவர் அறிந்தவராகவே இருந்தார். எலியாவின் காலத்திலே இல்லாத பழைய ஏற்பாட்டு வேதவாக்கியத்தை அவர்கள் பெற்றிருந்தனர். அதேசமயம் வானத்திலே ஒரு அற்புதமான நிகழ்வு ஏற்படவேண்டும் என்பது அந்த பரிசேயர், சதுசேயருக்கு அவசியமில்லை. ஆனால், தங்கள் மத்தியிலே இருக்கிற இயேசுவானவரே தங்கள் மேசியா என்பதற்கான காலங்களின் அடையாளங்களை குறிப்பிடும் வேதவசனத்தை படித்தவர்களாக இருந்திருக்க வேண்டும். நாம் பரிசுத்த வாக்கியங்களையும் தீர்க்கதரிசிகளின் போதனைகளையும் பார்த்து பகுத்தாராய்ந்து, அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் இயேசுகிறிஸ்துவின் முதல் மற்றும் இரண்டாவது வருகையின் காலப்பகுதியினை அறிந்துள்ளோம்.

வேதாகமத்தின் தீர்க்கதரிசன செய்தியானது, அவரு டைய இரண்டாம் வருகையின் பிரசன்னத்தை மாத்திரமல்லாமல் யுகத்தின் முடிவில் கிறிஸ்துவின் மணவாட்டியும் நிறைவடைந் ததைப் பற்றியும் குறிப்பிடுகின்றன. அந்த சமயத்திலே ஒரு முக்கியம் வாய்ந்த நிகழ்வாக, 1914 -ம் ஆண்டிலே மகா உபத்திரவக்காலத்தின் ஆரம்பமான உலக மாகயுத்தமானது வெடித்தது என்பதையும் வெளிப்படுத்தினது. (தானி. 12 : 1; மத். 24 : 21). இந்த உலகமகா யுத்தத்தின் போதே இதோடுகூட நெருங்கிய தொடர்புடையதான தெரிந்துக் கொள்ளப்பட்டோரான கிறிஸ்துவின் மணவாட்டி சபையின் அங்கத்தினர்களுக்கு முத்திரைப் போடப்பட்டு தீர்ந்தது (வெளி. 7 : 3). இப்படியாக காலங்களின் அடையாளங்களில் ஒன்றாக 1914-ம் வருடத்திலே பரம அழைப்பு முடிவைடைந்தது என்பதை நாம் அறிந்து கொண்டுள்ளோம். தேவனுடைய திட்டம் முன்னேறியது. இந்த உபத்திர சம்பவங்களை அங்கீகரிப்பதின் மூலமே நாம் கால ஓட்டத்தில் எங்கே இருக்கிறோம் என்பதை துள்ளியமாக பகுத்துணர முடியும். இந்த சமயத்தில் நான் பில்லிகிரகாமைப் பற்றி நினைக்கிறேன். அவர் உடல் நலம் மிகவும் குன்றிப் போய் உள்ளது. மேலும் அவரால் தகுந்த முறையில் பகுத்துணர முடியாத நிலையிலும் உள்ளார். ஆனால் 15 வருடங்களுக்கு முன்பு காலங்களின் அடையாளங்களைப் பற்றி அவர் குறிப்பிட்டார். ஆயினும், காலங்களின் அடையாளங் கள் என்று அதனைக் குறிப்பிடவில்லை. ஏனெனில் அவர் சொல்லும்போது "நமதாண்டவர் சொன்னது போன்று நாம் இப்போது மகா உபத்திரவத்தில் இருக்கக்கூடும்" என்று "நான் ஆச்சரியப்படுகிறேன்" என்றார். அவர் மனம் இவ்விதமாக சிந்திக்குமானால், நமதாண்டவர் இரண்டாம் முறை வரும் போது, உலகம் சீர்பொருந்திய நிலையில் இருக்கும் அப்போது இயேசு வந்து தமது சபை வகுப்பாரையும் தமது உண்மைத்துவமுள்ள யாவரையும் பரலோகத்திற்கு கூட்டி செல்வார் போன்ற தவறான நம்பிக்கைகள் வெறியேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன

என்பதாகும். இந்த பில்லிகிரகாம் மகா உபத்திரவக் காலமானது இந்த காலமே என்று எண்ணினாரென்றால், முன்பு அவர் கொண்ட நம்பிக்கைகளெல்லாம் தவறான கண்ணோட்டம் கொண்டவை என்றும், உணருவார். அப்போது அநேகர் முன்பு விசுவாசித்திருந்த கருத்தின்படி பார்க்கும் போது அர்மெகதோன் வெடிக்கும் போது அதாவது உபத்திரவத்திற்கு முன்பு அவர்கள் யாருமே பரலோகத்திற்கு போகப் போவது இல்லை. ஏனெனில் அவர்கள் இன்னும் இங்கேயே இருக்கிறார்கள்.

ஒவ்வொரு தேசமும் 1914 – ல் துவக்கத்திலே உலக மகா யுத்தத்தில் இணைந்தது. இதில் அமெரிக்கா தான் இந்த யுத்தத்திலே கடைசியாக இணைந்த நாடாகும். ஆக இவை குறிப்பிடுகின்றது யாதெனில் பரிசுத்தவான்கள் அனைவரும் இந்த காலப்பகுதியோடு தங்கள் நெற்றிகளில் முத்திரையிடப்பட்டு தீர்ந்தார்கள் என்பதே (வெளி. 7 : 3, 4).

உப்பைக் குறித்து ஒருவிஷயம் சொல்ல வேண்டி யிருக்கிறது. இந்த உப்பின் மூலம் நாம் என்ன செய்ய முடியும் என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் இதை வைத்து நாம் எதையாவது செய்யலாம். நமதாண்டவர் தமது ஜீவிய நாட்களிலே சபையாருக்கு சொல்லும்போது, "**நீங்கள் பூமிக்கு உப்பா யிருக்கிறீர்கள்**" என்றார், இரண்டாவது கருத்தில், நாம் பார்க்கும் போது இன்றைக்கு வரையிலும் பிரதிஷ்டை செய்த எல்லாருக்கும் இது பொருந்தும்.

இது எதை அர்த்தப்படுத்துகின்றது? என்றும் கூட நீங்கள் கேட்கலாம்? நான் சிறுவனாக இருக்கும் போது என்னுடைய சகோதரரோடு சேர்ந்து வீட்டிலே சில விஷயங்களை செய்வோம். வருட முடிவில் என் தகப்பனார் சில மிருகங்களைக் கொண்டு வந்து அவைகளை உணவுக்காக வெட்டுமிடத்திற்கு எடுத்து செல்வார். அவைகளின் மாமிசம் சேகரித்துவைக்கப்படும். அது பதப்படுத்திவைக்கப்பட வேண்டும். மேலும் எங்களிடம் ஒரு பெரிய மண் பானையும் இருந்தது. அது 30 அங்குல வட்டமும், 36 அங்குல உயரமுமாக இருந்தது. எங்களுடைய தகப்பனார் அதனை மரத்தினால் செய்யப்பட்ட மூடி ஒன்றை எடுத்து அதனை சுற்றிலும் குழிபோன்று செய்து, அதோடு பெரிய கல்லைவைத்து, அந்த மண்பானையின் மேலும் கீழும் முழுவதும் துணிகளால் சுற்றிவைப்பார். இவ்விதமாகவே நாங்கள் சில ஆகாரங்களை பதப்படுத்திவைப்போம். எங்களுக்கு தேவையான போது உப்பினால் பதப்படுத்தி வைக்கப்பட்ட இறைச்சியை எடுத்துக் கொள்வோம். ஆக குளிர்காலங்களில் குளிர் சாதன பெட்டியே அவசியமில்லாதிருந்தது. 1939 வரையிலும் குளிர்சாதன பெட்டி இல்லை, இதன் பின்பே இது பொதுவான உபயோகத்திற்கு வந்தது. நாங்கள் எங்களது முதல் குளிர்சாதனப் பெட்டியை வாங்கினோம். குளிர்பிரதேசம் போன்று இது இருந்தது. ஒவ்வொரு முறையும், யாராவது இந்த குளிர்சாதன பெட்டியின் கதவைத் திறந்தால் எங்கள் தகப்பனார் வருத்தப்படுவார். ஏனெனில் மின்சாரம் அதிகமாய் செலவாகின்றது என்று சொல்லுவார். ஆயினும், இன்னொரு பெரிய மண்பாண்டத்தில் காய்கறிகளையும் வைத்து, காய்கறிகளை சேகரித்து வைக்கும் நிலவறையிலே அதனை குளிராக வைப் போம். குளிர்காலத்தில் ஜன்னலை நாங்கள் திறந்து வைத்திருப் போம். அது இன்னும் குளிராகும். உப்பினால் பதப்படுத்தி வைக்கப்பட்ட இறைச்சியானது துண்டுகளாக பிரிக்கப்பட்டிருக்கும். என்னுடைய சகோதரன் முட்டைகோசு அறுப்பதை நான் நினைவில் கொண்டிருக்கிறேன். அந்த பாத்திரத்திற்கு கீழே அறுக்கும் கத்தி இருக்கும். ஆகவே நாங்கள் அதனை பாத்திரத்தில் போட்டு, அதை அந்த கத்தியை நேராக வைத்து அறுப்போம். அப்போது அது நான்காக வெட்டப்பட்டுவிடும். 4 அங்குல முட்டை கோசை நாங்கள் அந்த மண்பானைக்குள்ளே வைப்போம், அப்போது எனது தந்தை அதில் கொஞ்சம் உப்பை போடுவார். பின்பு அவர் நாம் இன்னும் அதிகமாக முட்டைகோசை போட்டு அதனை உப்போடு கலந்து வைப்போம் என்பார். அன்று குளிர்சாதனப் பெட்டி இல்லாத காலத்தில் பனிக்கட்டியை வைத்து உணவுப் பொருட்களைப் பதப்படுத்தி வைப்போம். மேலும் உப்பின் மூலம் அதிக காலம் பதப்படுத்தி வைக்கலாம்.

இப்படியாக இதனையே நமதாண்டவரும் சபையார் சம்பந்தமாக குறிப்பிட்டார். கிறிஸ்தவ ஜனங்கள் உலகம் முழுவதிலும் சிறந்த குணமுடைய பாத்திரங்களாக இருந்தனர். மனுக்குலத்தின் மத்தியில் அவர்கள் பதப்படுத்தும் பயனைக் கொண்டிருந்தனர். ஏன் உபத்திரவங்கள் எல்லாவிடங்களிலும், புரட்சிகளோடும், அராஜகங்களோடும், சமுதாயத்தில் இணைக் கப்பட்டு அதிக கடுமையாகிக் கொண்டே வருகிறது என்று நீங்கள் ஆச்சரியப்படுவீர்களானால், அது, முதன்மையான உப்பானது (அதாவது முதற்பேறானவர்களான சபை வகுப்பார்) பூமியி லிருந்து எடுக்கப்பட்டு போனதினாலேயே இவைகள் இன்னும் கடுமையாகிக் கொண்டு வருகிறது.

***



**பழைய ஏற்பாட்டு அடையாளம்**
*எலியா மெய்யான தேவனுக்கு பலி செலுத்துகிறார்.*

## தேவனிடத்திலிருந்து வரும் அடையாளங்கள்



**தற்கால அடையாளங்கள்**
*1914, முதலாம் உலகப்போர், உபத்திரவ காலத்தின் துவக்கம்*

# சாலமோன் கட்டிய ஆலயம்

The Temple That Solomon Built

**1 ராஜா. 5 : 1–12**


இந்த பாடத்தின் முக்கியமான கருத்தானது மேலே தெரிந்தெடுக்கப்பட்ட வசனங்களுடன் ஓரளவு சம்பந்தப் படுவதாக இருக்கிறது. சாலமோனால் கட்டப்பட்ட ஆலயமானது மாபெரும் நிலப்பரப்பில் கட்டப்படவில்லை. பண்டைய காலத்தின் பிரம்மாண்டமான கட்டுமான மாகவோ, உயரமானதாகவோ இருந்ததுமில்லை. அநேக பண்டைய ஆலயங்கள் பெரிய நிலப்பரப்பில் கட்டப்பட்ட வைகளாக, பிரமாண்டமாக சிறந்தவைகளாக இருந்தன. ஆயினும் சாலமோன் ஆலயத்தின் கட்டுமானத்தில் அதிக அளவு தங்கம் பயன்படுத்தப்பட்டக் காரணத்தினாலும், அதனுடைய சித்திர வேலைப்பாடுகள் மிகவும் சிறப்பானதாக இருந்ததாலும் மற்ற எந்த ஆலயத்தையும்விட மிகவும் விலையேறப்பெற்றதாக இருந்தது. இந்தக் கட்டிடமானது வெள்ளைச் சுண்ணாம்புக் கற்களால் ஆனது. இது சூரிய வெளிச்சத்தில் சலவைக் கல்லைப் (marble) போன்று காணப்படும். கட்டுமானத்திற்குத் தேவையான கற்க ளானது ஆலயத்தின் சுற்றுபுறமெங்கிலும் எடுக்கப்பட்ட தாகும். உண்மையில் சாலமோனுடைய கற்குவாரிகள் என்றழைக்கப்படுகின்ற பெரிய குகைகள் எருசலேம் நகரத்தின் கீழ் இருந்தன. அதிலிருந்து ஆலயத்திற்கான கற்கள் வெட்டியெடுக்கப்பட்டதாக எண்ணப்படுகிறது. மிகவும் பெரிய சில கற்கள் சற்றேறக்குறைய சிறந்த வடிவ மில்லாததாகவும், பயன்படுத்துவதற்கு சாத்தியமில்லா திருந்ததாகவும் இருந்த காரணத்தினால் அந்த குவாரிகளில் இப்போதும் இருக்கின்றன. தூண்களும், உட்புறச் சுவர்களும், கதவுகளும், ஆலயத்தின் கூரைகளும், கேதுரு மரங்களினாலும் சிவப்பு சந்தன மரங்களினாலும் கட்டப்பட்டிருந்தது. இவை அனைத்தும் (கூரை உட்பட) முற்றிலும் தங்கத்தினால் மூடப்பட்டிருந்தது. தற்காலத்தில் பயன்படுத்துவது போன்று வெறுமனே தங்க இழைகளினால் முலாம் பூசாமல், ஒரு அங்குலத்தில் 8 பகுதி தடிமன் கொண்ட தங்கத் தகட்டினால் மூடப் பட்டிருந்தது. அவை தங்க ஆணிகளினால் அறையப்பட்டு இணைக்கப்பட்டிருந்தன, அதில் விலையேறப்பெற்ற கற்களும் பதிக்கப்பட்டிருந்தன.



சில கற்கள் ஃபோனிசியர்களின் (Phoenician) அடையாளங்களைப் பெற்றிருந்ததால் ஆலயத்திற்கான கற்களில் ஒரு பகுதி இறக்குமதி செய்யப்பட்டிருக்கலாம் என்று சிலர் எண்ணுவதற்கு இது காரணமாக இருக்கிறது. ஃபோனிசியர்கள் தங்கள் சொந்த நாட்டின் அடை யாளங்களை இது போன்று பயன்படுத்துவதை தங்கள் வழக்கமாகக் கொண்டிருந்த காரணத்தினால் ஃபோனிசிய வேலையாட்கள் கற்குவாரியில் கற்களை வடிவமைக்கிற பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பார்கள் என நாங்கள் எண்ணுகிறோம். உத்திரத்திற்கான மரமும் சாரம் கட்டுவதற்கான "தேவதாரு" மரங்கள் மட்டும் இறக்குமதி செய்யப்பட்டதாக இதுவரையுள்ள குறிப்பு காண்பிக்கின்றது. கேதுரு லீபனோனிலிருந்து வந்ததாகக் காணப்படுகிறது. பாலஸ்தீன நாடானது இதற்குத் தேவையான மரங்களைப் பெற்றிருக்கவில்லை.

புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்கள் சபையைப் பற்றி குறிப்பிடுகையில் ஆலயம் கட்டப் பயன்பட்ட கற்களை அடையாளப்படுத்துகின்றனர். சபையின் ஒவ்வொரு அங்கத்தினர்களும் "ஜீவனுள்ள கற்களாக" இருப்பதாகவும் அவர்களுடைய விசுவாசம் மற்றும் குணாம்சமானது தங்கத்தையும், வெள்ளியையும், ஆலயத்தை அலங் கரிக்கிற விலையேறப்பெற்ற கற்களையும் அடையாளப் படுத்தும் விதமாக அப்போஸ்தலர்கள் கூறினார்கள். ஆனால் ஆலயத்தின் மரமானது கிறிஸ்தவர்களை அடையாளப்படுத்துவதற்கோ அல்லது அவர்களுடைய விசுவாசம் மற்றும் குணசாயலை அடையாளப் படுத்துவதற்கோ பயன்படுத்தப்படவில்லை. ஏனென்றால் மரமானது அழியக்கூடியதாய் இருக்கிறது. சபையாகிய உண்மையான ஆலயத்தில் "**மரம், புல், வைக்கோலுக்கு**" இடமில்லை என அப்போஸ்தலர் காண்பிக்கிறார். (1 கொரி. 3 : 12). நாம் சாலமோனுடைய ஆலயத்தைக் கவனித்தால் மரமானது (ஆசரிப்புக் கூடாரத்தில் உபயோகப்படுத்தப்பட்டது போலவே), மரத்தை மூடியிருக்கிற தங்கத்தை அடையாளப்படுத்துவதற்காக அதின் உட்புறத்தை ஒரு நிரப்பும் கருவியாக மாத்திரமே மரம் பயன்படுத்தப்பட்டது. சுத்தமான தங்கத்தினால் மட்டுமே கதவுகள், உட்புறச் சுவர்கள், கூரைகள் அமைப்பதற்குத் தேவைப்படுகிற மிக அதிக அளவுத் தங்கத்தைச் சேகரிப்பது சாத்தியமற்ற ஒன்றாகும். ஆகவே இந்த காரணத்தினால் மட்டுமே மரம் பயன்படுத்தப்பட்டது. இந்த காரியம் சம்பந்தமாக இவ்வித கண்ணோட்டத்திலேயே சாலமோ னுடைய ஆலயத்தின் அடையாளமான உடமைகள் பாதுகாக்கப்பட்டன. அடையாளத்தில் சாலமோனின் தேவாலயம் கற்கள் மற்றும் தங்கத்தால் மட்டுமே கட்டப்பட்டது என்ற கண்ணோட்டத்திலேயே நாம் பார்க்க வேண்டும்.

ஆலயத்தின் பொருட்கள் யாவும் அடையாள மானவைகளாய் இருந்தன. அது மாத்திரமல்ல சால மோனுடைய அரசாட்சிக்கு முன்பதாகவே கூட்டிச் சேர்க்கப் பட்ட இப்படிப்பட்ட அநேகப் பொருட்களும்கூட அடையாள மாகவே இருந்தன. மேலும் குறிப்பாக பிரத்தியேகமான ஆயத்த வேலைகளும் மற்றும் கற்கள் பொருத்தப்பட்டதும் அடையாளமாகவே இருந்தன. கட்டிடத்தினுடைய கட்டுமான மானது தொடங்கப்பட்டதற்கு முன்னமே, ஒவ்வொன்றும் அதனுடைய பிரத்தியேகமான இடத்திற்குத்தக்க குறிக்கப் பட்டு, தயார் செய்யப்பட்டு, பொருத்தப்பட்டது. எனவே நிறைவேறுதலிலும் தேவனுடைய உண்மையான ஆலயத் தின் அங்கங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஜீவனுள்ள கற்களாக, சுவிசேஷ யுகத்தின் மகிமையான சபையாக, சாலமோன் கட்டியதைவிட உன்னதமானதாக, பரலோக இராஜ்யத்திற்கான ஆயத்தத் தில் தங்களுடைய ஜீவியத்தின் குவாரியில் செதுக்கப்பட்டு, மெருகேற்றப்பட்டு, பின்னால் வரவிருக்கும் தேவனுடைய மகா பெரிய திட்டத்தின் குறிப்பிட்ட இடத்தை அவன் பெறுவதற்கு ஆயத்தமாக்கப்பட்டு, தயார் செய்யப்பட்டு பொருத்தப்பட்டார்கள். சாலமோனுடைய ஆலயத்தைக் கட்டுவதற்கான பல்வேறு விதமான கற்கள் அனைத்தும் ஆயத்தமாக்கப்பட்டபோது, "**சுத்தியின் சத்தம் எதுவும் கேட்கப்படாமல்**" வேகமாகவும், சத்தமில்லாமலுமே செயல் படுத்தப்பட்டது. 1 ராஜா. 6 : 7. எனவே நிறைவேறு தலான சாலமோனின் மேற்பார்வையின் கீழ் நிறை வேறுதலான ஜீவனுள்ள கற்கள் அனைவரும் ஆயத்த மாக்கப்பட்ட இந்த உண்மையான தேவனுடைய ஆலய மானது "பரிசுத்தமும் பாக்கியவான்களுமாக" "**முதலாம் உயிர்த்தெழுதலில்**" குழப்பம் அல்லது சத்தமில்லாமல் விரைவாகக் கூட்டிச்சேர்க்கப்படுவார்கள். இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை. வெளி. 20 : 6.



*ஆலயத்து சுவரின் விரிசல்களில் குறிப்புத் தாள்கள் சுருட்டிவைக்கப்பட்டுள்ளன.*

***

## <u>அறிவிப்பு</u>

## LHMM கன்வென்ஷன் – 2011

### இடம்: நாசரேத்: தேதி: அக்டோபர் 21, 22, 23

**இந்த கன்வென்ஷனில் கலந்து கொண்டு தங்கள் பிரதிஷ்டையை புதுப்பித்துக் கொள்ளும்படியாக சத்திய சகோதர, சகோதரிகள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம். சங். 133.**

# வேதாகம வினா பெட்டி  Bible Question Box

***தேவனிடத்திலிருந்து வரும் சோதனைக்கும் நல்லொழுக்கப் பயிற்சிக்கும் இடையில் உள்ள வித்தியாசம் என்ன? இந்த வித்தியாசத்தை தெளிவாக அறிய நம்மால் இயலுமா?***

"**அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.**" **1 பேது. 1 : 7.** "**பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாதீர்கள்.**" **1 பேது. 4 : 12.** இந்த வசனத்தில் கூறப்படுகிற "**உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினி**" என்பது, இஸ்ரவேலருடைய ஆசரிப்புக் கூடாரம் மற்றும் ஆலயத்தின் பலிபீடத்தின் அக்கினியை நேரடியாகக் குறிப்பிடுகிறது. இது சுவிசேஷ யுகம் முழுவதும் ஆண்டவர் தம்முடைய ஜனங்களுக்குக் கொடுத்தப் பரீட்சைகளையும், நல்லொழுக்கப் பயிற்சிகளையும் நன்றாக அடையாளப்படுத்துகிறது. [ரூதர்ஹாம் மொழிபெயர்ப்பைப் பார்க்கவும்]. இந்த இரண்டு வசனங்களிலும் உள்ள "சோதித்தல்" என்ற வார்த்தையானது கிரேக்கத்திலும் (டோகிமியான் – Dokimion) பரீட்சித்தல், சோதித்தல் என்ற அர்த்தத்தையே கொடுக்கிறது. இதன் மூலச் சொல் டோகிமி (Dokime) என்பதாகும். அதற்கு நிரூபித்தல் (proof-ஆதாரம்) என்பது அர்த்தமாகும். அவ்விதமாகவே 2 கொரி. 8 : 2-ல் இது காணப்படுகிறது. "**அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்.**"

பெய்ரா (Peira) என்ற மற்றொரு கிரேக்க வார்த்தையானது, ஒரு பரீட்சையை, ஊடுருவிப் பார்த்தல், ஓர் முயற்சியை அல்லது அனுபவத்தைக் குறிப்பிடுகிறது. "**வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அனுபவித்தார்கள்:**" **எபி. 11 : 36.** நிச்சயமாக தேவனிடத்திலிருந்து வரும் நல்லொழுக்கப் பயிற்சிகள் உண்மையில் சில சமயங்களில் சோதனைகளாக நம்முடைய வளர்ச்சிக்காக தேவனால் ஏற்படுத்தப்படுகிறதை நாம் காணலாம். சில நேரங்களில் நம்முடைய எதிராளிகளின் தாக்குதல்களும் நம்முடைய சொந்த நலனுக்காக நமக்குச் சம்பவிக்கிறதற்கு அவர் முறைப்படி அனுமதிக்கிறார். இந்த சம்பவங்கள் எவ்விதமாய் உண்டானது என்பதை அறிய சில நேரங்களில் கடினமானவைகளாய் அல்லது அடையாளம் காண இயலாதவைகளாய் இருக்கின்றன. ஆனாலும் ரோம. 8 : 28 போன்ற வேத வாக்கியங்கள் நமக்கு இருக்கின்றன. "**அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.**" இங்கே "**சகலமும்**" என்பது தாமதங்களாகவோ, பாடுகளாகவோ, உபத்திரவங்களாகவோ, துன்புறுத்துதல்களாகவோ மற்றும் பேராபத்துக்களாகக் காணப்படுபவைகளாகவோ (பொருளாதார ஏமாற்றங்களாகவோக்கூட) இருக்கலாம். இவைகளின் மூலமாக நம்முடைய குணத்தின் பலம் வளர்க்கப்பட்டு முடிவாக நமது குணங்களில் அவை நிலைபெறுமட்டும் இந்த பரீட்சைகளானது, நாம் மேலும் பெலப்படவும், கிருபையிலும், நேர்த்தியிலும் வளர்ச்சியடைவதற்குப் பயன்தரக்கூடியவைகளாகப் பிரயோகிக்கப்படுகின்றன. இந்த காரியத்தில் நாம் அடையும் தோல்விகளும்கூட நம்முடைய சத்துருக்களின் வல்லமையை மதிப்பிடுவதற்கு நம்மை வழி நடத்துகிறதினால், நம்மை வழிநடத்துகிற நம்முடைய தேவனுடைய வல்லமையினால் நாம் நிச்சயமாக ஜெயம் கொள்ள வேண்டும்.

ஆகையால் இந்த சோதனைகள் சில நேரங்களில் அனுபவங்களாக இருக்கின்றன. எபி. 11–ல் கூறப்பட்டுள்ளபடி பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் பரீட்சிக்கப்பட்டதைப் போலவே ஆண்டவர் தம்முடைய பராமரிப்பினால் நாம் பரீட்சிக்கப்படும்படியாக அவர் நமக்கு சோதனைகளை அனுமதிக்கிறார் என்பதை நாம் காணலாம். இதை நாம் ஒரு சோதனை அல்லது ஒரு நல்லொழுக்கப் பயிற்சி என அழைக்கலாம். நல்லொழுக்கப் பயிற்சி (discipline) என்பதின் மூலச் சொல் "சீஷன்" அல்லது "பின்பற்றுபவர்" (disciple) என்பதாகும். கிரேக்கத்தில் இது மதேடிஸ் (Mathetes) எனப்படுகிறது. மதேடிஸ் என்றால் கற்பவர் அல்லது மாணவர் என்பதாகும். நம்முடைய குணசாயலானது அவருடைய விலையேறப்பெற்ற சொந்தக் குமாரனைப் போன்று வடிவமைக்கப்பட, அவரிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளவேண்டும் என்று சில சமயங்களில் கடினமாக இருக்கிற அனுபவங்களை தேவன் நமக்குக் கொடுக்கிறார். உண்மையில் குணசாயல் என்ற வார்த்தைகூட (character, karacter) அழகான உருவம் அமை அல்லது செதுக்குதல் என்ற கருத்திலிருந்துதான் வருகிறது. மனிதக் கண்ணின் மையப் பகுதியானது (pupil) "கருவிழி", கண்மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில் இந்த கருவிழியானது வெளிச்சத்திற்கு சட்டென்று கீழ்ப்படிகிறதின் காரணமாகவும், பார்வை நேர்த்தியாக இருக்கும் விதமாக அதற்கேற்றவாறு கருவிழியானது சுருங்கி, விரியும்படி அமைக்கப்பட்டிருக்கிறது. "கருவிழி" அல்லது கண்மணி என்பதற்கும், நாம் மேற்கூறிய "மாணவர்" என்பதற்கும் "pupil" என்ற ஒரே ஆங்கில வார்த்தை தான் என்பதை கவனிக்கவும். இப்படிப்பட்ட பல்வேறு கடினமான அனுபவங்களையும் நமக்கு அனுமதிப்பதின் மூலமாக, நம்முடைய சூழ்நிலைகளில் நாம் எவ்வாறு அதற்குத்தக்க சரியாக நடக்க வேண்டும் என்பதை அதிக மதிகமாக அவர் நமக்குக் காண்பிக்கிறார்.

"**அக்கிரமத்தை விட்டுத் திரும்பும்படி அவர்கள் செவியைத் திறந்து கடிந்துகொள்கிறார்.**" **யோபு 36 : 10.**

***

**பிழைத்திருத்தம்**

*சென்ற இதழில் 3–வது பக்கம், முதல் பத்தி, 17–வது வரியில் : "உண்மை தேவனுடன் பாடனுபவித்தவரும்" என்று உள்ளது; அதனை "உண்மையுடன் பாடனுபவித்தவரும்" என்று திருத்திக் கொள்ளவும்.*

# யாக்கோபின் ஏணி சொப்பனம்

## Jacob's Ladder Dream



தேவ தூண்டுதல் இல்லாத எழுத்தாளர்கள் யாக்கோபை கண்டித்து என்னவெல்லாம் உரைத்தாலும், ஆவியினால் ஏவப்பட்ட வேதாகம எழுத்தாளர்கள் எந்த ஒரு பிரத்யேக கண்டனத்தையும் கூறாமல் அவனுடைய பெருமையை அதிகம் உரைக்கிறார்கள். அவனுடைய விசுவாசம் பிரத்தியேகமாக புகழப்பட்டு இருக்கிறது.

யாக்கோபு, அவனுடைய பாட்டனாகிய ஆபிரகாமுடன் தேவன் செய்த மகா உடன்படிக்கையின் அங்கீகரிக்கப்பட்ட சந்ததியாவான். இந்த வாக்குத்தத்தம் மிக மிக முக்கியமான தாகக் கருதப்பட்டது. அதில் விசுவாசம் வைத்தல் மிகவும் அவசியமானதாகும். பின்னர், இந்த வாக்குத்தத்தத்தை தேவன் தம்முடைய ஆணையின் மூலம் உறுதி செய்தார். ஆசீர்வாதமானது இஸ்மவேல் மூலமாக அல்லாமல் ஈசாக்கின் மூலமாகவே வரும் என்பதை தெய்வீக ஞானம் முன்னதாகவே சுட்டிக்காட்டியது. ஆதி. 21 : 12.

இந்த தெய்வீக தீர்மானமானது யாக்கோபும் ஏசாவும் தெரிந்தெடுத்தல் சம்பந்தமாக எதுவும் செய்வதற்கு முன்பதாகவே முடிவு செய்யப்பட்டது என்று பரி. பவுல் கூறுகிறார். ஆசீர்வாதமானது ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மூலமாகவும் மற்றும் பின்னாளில் யாக்கோபின் சந்ததியாகிய இஸ்ரவேலின் புத்திரரின் மூலமாகவும் வர வேண்டும் என்பதை தேவன் முன்கூட்டியே தீர்மானித்தார். ரோம. 9 : 11, 12.

ஏசா பொழுதுபோக்கையும், விளையாட்டையும் விரும்பினான். அவனுடைய இரட்டை சகோதரனும், சற்றே பிந்தியும் பிறந்தவனுமான யாக்கோபு ஆபிரகாமின் வாக்குத்தத் தத்தை விரும்பினான். அந்த பரிசை பெற்றுக் கொள்வது சம்பந்தமாக ஒப்பிட்டால், உலகப் பிரகாரமான செல்வம் ஒன்றுமேயில்லை என்று யாக்கோபு எண்ணினான். ஒரு நாள், இரண்டு பேருமே பசியாயிருந்தார்கள். யாக்கோபு தனக்காக ஒரு ஆகாரத்தை தானே ஆயத்தப் படுத்தி இருந்தான். ஆனால் தன்னுடைய சகோதரனுக்கு அதில் ஒரு பகுதியை மாத்திரம் கொடுப்பதற்கு பதிலாக, முழுவதையும் அவனுக்கு கொடுத்து அதற்கு பதிலாக ஆபிரகாமுக்கு செய்யப்பட்ட வாக்குத்தத்ததின் தன்னுடைய சுதந்திரவீதத்தை வாங்கி கொண்டான். ஏசாவும், ஒருபோதும் நிறைவேற்றப்பட போவதாக இல்லை என்பது போல தோன்றின வாக்குத்தத்தத்தை விட உணவை மிகவும் விலைமதிக்க முடியாத ஒன்றாக மதித்து அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டான். ஆதி. 25 : 31-34.

யாக்கோபின் தாய், ஏசாவினுடைய குணாம்சத்தின் பின்னடைவை அறிந்தவளாய், யாக்கோபு பிறப்புரிமையை வாங்கி இருக்கிறபடியால், சரியானபடி யாக்கோபு ஏசாவை போல சென்று ஆசீர்வாதத்தை பெற வேண்டும் என தீர்மானித்தாள். அது யாக்கோபு தன் குடும்பத்தை இழந்து போகவும், அவனுடைய ஜீவனுக்கும் ஆபத்து உண்டாக்கவும் காரணமாக இருக்கும் என்பதை அவள் அறிந்திருந்தாள். யாக்கோபு வீட்டை விட்டு ஓடும்போது, இரவில் வழியில் படுத்து உறங்கினான். தன்னுடைய தலைமாட்டு கல்லில் இருந்து வானம் வரைக்கும் வைக்கப்பட்ட ஒரு ஏணியில், தேவதூதர்கள் ஏறுகிறதும் இறங்குகிறதுமான ஒரு சொப்பனத்தைக் கண்டான். இந்த சொப்பனமானது, யாக்கோபு ஆழமாக விருப்பம் கொண்டிருந்த ஆபிரகாமின் உடன்படிக்கையின் நிறைவேறுதலையும், பரலோகத்திற்கும் பூமிக்கும் இடையே சமாதானமும் ஐக்கியமும் மீண்டும் நிலைநாட்டப்படுவதையும் குறிப்பிடுகிறது.

***

Visit us at : **www.biblestandardindia.com**

***For English Magazines, Volumes & Translated Tamil Magazines Contact :***

**Laymen's Home Missionary Movement**

32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617

Thoothukudi District, Tamil Nadu, India.

E-mail ID : vincent.v31@gmail.com

Cell : 98949 26629

**FOR PRIVATE CIRCULATION ONLY**